"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

சித்திரை - வைகாசி - ஆனி 2015

மன்மத
வருடப் புத்தாண்டு
வாழ்த்துக்கள்



திருவாய் நகுலைத் திருக்கோயில் மேவும்
பெருமான் அடிதொழுதாற் பின்னே - ஒருநாளும்
புன்மைகள் வாரா புதுமலர்ச்சி உண்டாகும்
நன்மையெலாம் சேரும் நயந்து

- நகுலேச்சரத் திருவிரட்டை மணிமாலை -

ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

பெருமையுடன் 21வது வருடத்தில்

# RUBY'S

CATERING

020 8799 7180

www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
|---|---|---|





திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா

கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்

அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா





ACCREDITED SRILANKAN CATERERS @

Hilton THISTLE HOTEL Holiday Inn

உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற

தரம் மிகு இலங்கை மற்றும்

தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......

Tel: 020 8799 7180

mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk

மணி 23

# கலசம்
# KALASAM

ஒலி 77

www.saivamunnettasangam.com

FREE ISSUE

## சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்

நாகரிக வாழ்வும் நவீன உலகமும் மக்களை மிகவும் மாற்றிவிட்டது. ஆசைகள், எதிர்பார்ப்புக்கள் அதிகரித்துவிட்டன. விரைவாகவே எல்லாம் தேவைப்படுகின்றன. பணம் விரைவாகச் சேர்க்கவேண்டும்; நோய் விரைவாகக் குணமாகவேண்டும்; உணவு வேகமாகக் கிடைக்கவேண்டும்; பட்டம், பதவி எல்லாம் தாமாக வரவேண்டும் என்று பல எதிர்பார்ப்புக்கள் மக்களிடையே ஏற்பட்டுவிட்டன. மற்றவர்களை விட நாம் ஒருபடியாவது மேலே இருக்கவேண்டுமென்ற சிந்தனை பல வழிகளிலும் மனிதரை மாற்றிவிட்டது. அதனால் மக்கள் தொடரும் ஆன்மிகவழியும் மாற்றம் அடையத் தொடங்கிவிட்டது.

இப்போதெல்லாம் நினைத்தவுடன் காரிலேபோய்க் கடையிலே பிடித்த உணவை வாங்கிவர முடிகிறது. வீட்டிலே சமையல் செய்யவேண்டிய அவசியம் இல்லை. என்ன நவீன கருவி வேண்டுமோ, வீட்டில் இருந்தபடியே வாங்கமுடிகிறது. இந்த மாற்றங்களால், கடவுளையும் இலகுவாக அடைய; அருள்பெற மக்கள் நினைக்கிறார்கள். அதன் விளைவு? எந்தக் கடவுள் விரைவில் அருளுவார் என்ற சிந்தனை மக்கள் மனதில் ஏற்படுகிறது. இவர்களின் பலவீனத்தைப் பணமாக்கவென்றே பலர் உருவாகியுள்ளார்கள். அந்தச் சுவாமிக்கு அர்ச்சனை செய்தால் இது கிடைக்கும், இந்தச் சுவாமிக்கு அபிடேகஞ்செய்தால் அதுகிடைக்கும் என்று அறிவுரை பகரத் தொடங்கிவிட்டார்கள். மக்களும் அவற்றை நம்பி அவர்கள் சொற்படி எல்லாவற்றையும் தெய்வமாக வழிபட ஆரம்பித்துவிட்டார்கள். **'சிறு'தெய்வ** வழிபாடு தோன்றிவிட்டது.

"சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்" - அப்பர்

"கற்றைவார் சடையெம் அண்ணல் கண்ணுதற் பாதம்நண்ணி
மற்றுமோர் தெய்வந்தன்னை உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலாதவரைக் கண்டால் அம்ம! நாம் அஞ்சுமாறே" - மணிவாசகர்

"சில்லாண்டிற் சிதையும் சிறுதேவர் சிறுநெறி சேராமே" - சேந்தனார்

**அருளாளர்கள் எமக்காக அருளிய இத்திருப்பாடல்களை நாம் மனத்திருத்தி சைவ நெறியைக் கடைப்பிடிப்போமா?**

**நிர்வாகக் குழு:** திரு. க. ஜெகதீசுவரன் (ஆசிரியர்) திரு. ச. ஆனந்ததியாகர்
திரு. சி. அற்புதானந்தன் திரு. வ. இ. இராமநாதன் திரு. வை சிவனருட்செல்வர்
திரு சி தம்பு

**தொடர்பு முகவரி:** SMS 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732

# இந்த இதழில்


| | |
|---|---|
| சிதம்பரம் குடமுழுக்கு விழா | 03 |
| விம்பிள்டன் விநாயகர் | 04 |
| சம்பந்தர் செந்தமிழ் | 05 |
| மஹாராஷ்டிரா - பயணக்கட்டுரை | 10 |
| சிவனடியார் நிந்தை சிவநிந்தையே | 14 |
| திருவைந்தெழுத்து | 17 |
| ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி விசேட தினங்கள் | 19 |
| கலிக்கம்ப நாயனார் | 20 |
| தென்னையும் விருந்தோம்பலும் | 29 |
| Temples in Sri Lanka That We Visited | 30 |
| கல்வியின் பயன் | 33 |
| பொய்யாத விநாயகர் மூர்த்தி - மலாக்கா | 35 |
| கண்ணனும் தாத்தாவும் | 38 |
| Hinduism in search of Answers | 42 |


**அட்டைப்படம்: கீரிமலை நகுலேஸ்வரர் திருக்கோயில் கோபுரம்**

**படம்: வேதா**

# சிதம்பரம்
# ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ ஆனந்த நடராஜ மூர்த்தி கோயில்
# குடமுழுக்கு விழா

**செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்**
**செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற**
**செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய**
**செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே**

- திருஞானசம்பந்தர்

மன்மத வருடம் சித்திரை மாதம் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை (01.05.2015) காலை 7 மணி முதல் 8.30 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் கோயில் திருக்குடமுழுக்கு விழா நடைபெறவுள்ளது. அம்பலக் கூத்தனின் திருவருளால், அவரின் ஆணைப்படி தில்லைவாழ் அந்தணர்களின் பெருமுயற்சியால் இவ்வைபவம் இனிது நடைபெறும். இதற்கு முன்னர் 1955ஆம் ஆண்டிலும் 1987ஆம் ஆண்டிலும் திருக்குடமுழுக்கு விழா நடைபெற்றது.

கோயில் என்பது சிதம்பரம் என்பர் யாழ்ப்பாணத்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள். "கோயில் என்பது சிதம்பரம், தீர்த்தம் என்பது சிவகங்கை" என்றொரு வாசகம் உண்டு. சைவர்கள் உலகில் எங்கு இருந்தாலும் தம் வாழ்க்கையில் ஒரு நாளாவது சிதம்பரத்தைச் சென்று தரிசிக்கவேண்டும். ஆரூரிற் பிறக்க முத்தி, காசியில் இறக்க முத்தி, திருவண்ணாமலையை நினைக்க முத்தி. சிதம்பரம் தரிசிக்க முத்தி என்று சொல்வார் ஆன்றோர். சைவசமயக் குரவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர் சுவாமிகள் ஆகிய நால்வரும் வழிபட்ட தலம் சிதம்பரம்.

***'தலங்கள் பசுப்போல; தலங்களின் நடுவே விளங்கும் திருக்கோயில்கள் பசுவின் மடிபோல; ஆன்மகோடிகள் கன்றுகள் போல; கன்று வேட்கையோடு முட்ட, மடியினின்றும் பால் சுரக்கும். அதுபோலவே ஆன்மாக்களாகிய நாம் அன்பு கனிந்த உள்ளத்தோடு வழிபட, ஆலயங்களின் அருள் விளங்கும்.'***

இந்தக் கோயிலின் மூலவரைத் திருமூலநாதர் என அழைப்பர். ஆலமரத்தின் கீழ் சுயமாகத் தோன்றிய இந்தச் சிவலிங்கத்தைப் பதஞ்சலி, வியாக்கரபாதர் என இரு முனிவர்கள் அநுதினமும் வழிபட்டு வந்தனர். அவர்களின் வேண்டுகோளை நிறைவேற்றவே சிவன் நடராஜமூர்த்தியாக எழுந்தருளிச் சதானந்தத் திருநடனம் செய்ததாக வரலாறு கூறுகின்றது. இந்த இருமுனிவர்களின் ஆசியினால் கௌடதேச சர்க்கரவர்த்தியான இரண்யவர்மன் கனக சபைக்குப் பொன் ஓடு வேய்ந்ததாகப் புராணம் கூறும். பின்பு பராந்தக சோழவேந்தனும் பொன்னாற் கூரை வேய்ந்ததாகவும் வரலாறு உண்டு.

மணிவாசகர், திருநாளைப்போவார், கணம்புல்லர், பெற்றான் சாம்பான், அப்பையதீக்ஷிதர் போன்ற பக்குவமுற்ற அடியார்களோடு ஒரு முள்ளிச்செடிக்கும் முத்தி கொடுத்த தலம் சிதம்பரம்.

***"ஒருதரம் சிவசிதம்பரமென்று உரைத்தாற் போதுமே***
***பரகதி பெற வேறு புண்யம் பண்ணவேண்டுமா? "***

**படம்: பக்கம் 48**

**வந்திப்போர் வினைதீர்வர் வந்தணைவோர் வரம்பெறுவர்**
**சிந்திப்போர் தெளிவுநிறை சிந்தையினைப் பெற்றுயர்வர்**
**சந்திரனைத் தலைவைத்தோன் தன்னடியார் இன்னலற**
**வந்துற்ற கணபதியாம் விம்பிள்டன் நாயகனை**

ஐரோப்பிய நாடொன்றில் முதன்முதற் சைவர்களுக்கெனக் கோயில் அமைத்த பெருமை அமரர் திரு இரத்தினசிங்கம் அவர்களையே சாரும். 1981ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 12ஆம் திகதியிலிருந்து இந்தக்கோயில் செயற்பட்டு வருகிறது. மக்கள் சேவை, இல்லாதோர்க்கு உதவுதல், அவரவர் சமய நம்பிக்கைக்கு ஏற்ப வழிபட வாய்ப்பளித்தல் என்பன போன்ற கொள்கைகளை உடையவராக அமரர் திரு இரத்தினசிங்கம் அவர்கள் இருந்தார்கள். அதுவே இந்தக் கோயில் அமைவதற்குக் காரணமாக இருந்ததெனலாம். எண்பதுகளில் வேறெங்கும் கோயில்கள் இல்லாத காலத்தில் பல ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் மக்கள் வந்து இந்தக் கோயிலில் வழிபட்டு அருள்பெற்றார்கள்.

# விம்பிள்டன் விநாயகர்

2015 ஜனவரி மாதம் 25ஆம் திகதி இந்தக் கோயில் புனராவர்த்தன உத்தம நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் கண்டது. 1981இல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து வளர்ச்சியடைந்து வந்த இந்தத் திருக்கோயில் தற்போது நடைபெற்ற குடமுழுக்கின் பின் மேலும் பொலிவடைந்து காணப்படுகிறது.

வழிபாட்டுக்கு மட்டுமன்றி வேறு பலசேவைகளுக்கும் இந்தத் திருக்கோயில் இடமளித்து வருகின்றது. தமிழ்ப் பாடசாலை, கவின்கலைப் பயிற்சி வகுப்புக்கள், பண்ணிசை வகுப்புக்கள் இங்கு நடைபெறுகின்றன. வீடற்றோர்க்கு உணவளித்தல், ஈழத்திலிருந்து வந்த நாடற்றோருக்கு உதவுதல் என்பன போன்ற சேவைகளையும் இக்கோயில் செய்தது; செய்துவருகின்றது.

கணவர் அமரர் ஆகிவிட்டபின் அவர் மனைவி திருமதி கருணேஸ்வரி அவர்களும் பிள்ளைகளான திருமதி கீதா, திருமதி லதா, திரு ரஞ்சித் ஆகியோரும் திருக்கோயிலைப் பாங்காக நிருவகித்து வருகிறார்கள். மருத்துவகலாநிதி திரு ச மகேஸ்வரன் அவர்கள் மருகராக அமைந்ததும் விநாயகர் திருவருளோ என எண்ணவைக்கிறது. அந்த அளவுக்குக் கோயிலிலும் பண்ணிசையிலும் வழிபாட்டிலும் ஈடுபாடுகொண்டவராக அவர் இருக்கிறார். கோயில்வழிபாடுகள், திருவிழாக்களிலே அவரின் முக்கியபங்கு இருக்கிறது.

முப்பது வருடங்களுக்கு மேலாகச் சைவமக்களுக்குத் தொண்டாற்றிவரும் இக்கோயில் மேலும் பல்லாண்டுகள் தொண்டாற்றவேண்டும் என்பதே விநாயகரின் அடியார்களின் பெருவிருப்பாகும். அதைச் செயற்படுத்த, கோயில் அறங்காவலர்களுக்கும் அமரர் திரு இரத்தினசிங்கம் குடும்பத்தினருக்கும் எல்லாம் வல்ல விநாயப்பெருமான் எல்லா நலன்களையும் அருளவேண்டும் என்று கலசம் குடும்பத்தினர் பிரார்த்திக்கிறோம்.

**"விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்"**

**நன்றி: Dr மகேஸ்வரன்**

**படம்: பக்கம் 47**

# சம்பந்தர் செந்தமிழ்

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி



**அருநெறிய மறைவல்ல முனியகன் பொய்கை யலர்மேய**
**பெருநெறிய பிரமாபுர மேவிய பெம்மா னிவன்றன்னை**
**ஒருநெறிய மனம்வைத்துணர் ஞான சம்பந்தன் உரைசெய்த**
**திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே**

வேதநெறி தழைத்தோங்கவும் மிகுசைவத்துறை விளங்கவும் பூத பரம்பரை பொலியவும் இவ்வுலகில் அவதரித்தவர் திருஞான சம்பந்தர். அவர் அவதாரத்தால் அசைவில் செழுந்தமிழ்வழக்கே அயல்வழக்கின் துறையை வென்றது. சைவமும் தமிழும் தழைக்கப் பாடியவர் சம்பந்தர். இவருடைய முதற்பதிகம் 'தோடு' என்ற சொல்லோடு தொடங்குகிறது. 'தமிழ்'என்ற சொல்லிலே முதலில் அமைந்த 'த்'என்ற மெய்யும் பிரவணரூபமாகிய ஓங்காரமும் சேர்ந்து ஒலிக்கும் முதலெழுத்தைக் கொண்டு 'தோடு' என முதலிற் குறிப்பிடுகின்றார். பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரியபுராணத்தின் இறுதிப்பாடலில் 'உலகெலாம்' என்று பூரண மடைகிறது. எனவே, திருமுறைகளின் தொடக்கமும் முடிவும் 'ஓம்' என்ற பிரணவத்தை உணர்த்தி நிற்பது புலனாகிறது. இச்சந்தர்ப்பத்தைப் பெரியபுராணத்தில் விளக்கிய போது சேக்கிழார் பெருமான்:

**"எல்லையிலா மறைமுதல்மெய் யுடன்எடுத்த எழுதுமறை**
**மல்லல்நெடுந் தமிழாலிம் மாநிலத்தோர்க் குரைசிறப்ப"**

என்று குறிப்பிடுகிறார். அவர் பாடிய பஞ்சாக்கரப்பதிகம், திருநீற்றுப்பதிகம், திருப்பாசுரம், கோளறுபதிகம் என்பவற்றை ஓதி உலகத்தார் இம்மையிலும் மறுமையிலும் உய்தியடைய வைத்தார் என்பதையே 'மாநிலத்தோர்க் குரைசிறப்ப' என்பதனால் விளக்கினார்.

ஆசாரியப் பெருமக்களின் முதல்வராகிய இவருடைய பாடல்கள் முதலாம் இரண்டாம் மூன்றாம் திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. அவற்றில் அமைந்த பாடல்கள் இயற்கைச் சிறப்பும் இலக்கிய இன்பமும் சமய உண்மைகளும் பொதிந்தவையாக, கொஞ்சு தமிழ்ப்பாணியாக அமைந்துள்ளன. இவற்றை ஓதுவோர் அடையும் பயனை முதற்பதிகத்து இறுதிப்பாடலிலேயே பெருமான் குறித்துக் காட்டியுள்ளார். அதனையே முதலிற் காட்டியுள்ளோம்.

தமிழ் இலக்கிய வரலாற்றிலே ஒரு புதிய திருப்பம் இவராலேதான் ஆரம்பிக்கப்பட்டது. சங்ககாலம், சங்கம் மருவிய காலமாகிய முதல் ஐந்து நூற்றாண்டுகளிலும் காதல், போர், கொடை, அறம் என்பனவே இலக்கியங்களில் மிகுந்து பேசப்பட்டன. ஆனால், பல்லவர் காலத்திலேதான் பத்தி இலக்கியம் தோன்றி ஞான உணர்வையூட்டி இறைவன் புகழைப்பாடும்

மரபு வளர்க்கப்பட்டது. இதனை மிகுதியும் வளர்த்தவர் திருஞானசம்பந்தப் பெருமானேயாவார். 'நாளும் இன்னிசையாற் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தன்' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியமையும் இதனாலேயே என்க. இவர் தனது பெயரோடு 'தமிழ்' என்ற அடையைப் புணர்த்தித் தமிழ் ஞானசம்பந்தன் என்று குறிப்பிட்டுள்ளார். தமிழை வெறும் இலக்கியத் தமிழாக இல்லாமல் ஞானத்தமிழாக மாற்றியவர் இவர். சேக்கிழார்பெருமான் அருளிய பெரியபுராணத்தை அரங்கேற்றியபோது பாராட்டுரை வழங்கிய அறிஞர்கள் 'தோடு' செய்த திருநெறிய செந்தமிழோடொக்கும்' என்று போற்றினர் என்பதும் உணர்தற்குரியது.

அம்மையின் அமுதஞானம் ஊட்டப்பட்டவர் இவர். அதன்பேறாக உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம் ஆகிய இரண்டையும் பெற்றார். சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் என்பது அபரஞானம். அதுவே உவமையிலாக் கலைஞானம் என்பதுமாகும். மற்றையது பரமஞானம். பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம் என்பது அதுவே. இதுவே உணர்வரிய மெய்ஞ்ஞானமாகும். இத்தகைய ஞான உணர்வுகள் பெற்றவரானபடியால் அவர் பாடிய பாடல்கள் கற்போர்க்கு ஞான உணர்வை ஊட்டக்கூடியவை. பெருமானுடைய பாடல்களை ஓதி உணர்ந்த பட்டினத்தார், சேக்கிழார், அருணகிரிநாதர், தாயுமானார், இராமலிங்க சுவாமிகள் முதலியோர் இவரையே குருவாகக் கொண்டு வழிபட்டனர். இவருடைய திருநெறிய தமிழில் திளைத்த இராமலிங்க அடிகள்,

**"தேன்படிக்கும் அமுதாம்உன் திருப்பாட்டைத் தினந்தோறும்**
**நான்படிக்கும் போதுஎனை நானறியேன் நாவொன்றோ**
**ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்**
**தான்படிக்கும் அநுபவங்காண் தனிக்கருணைப் பெருந்தகையே"**

என்று உருகிப் பாடினார்.

தொல்காப்பியர், இளங்கோவடிகள், திருவள்ளுவர் போன்றோர் பெருநூல்களை ஆக்கியபோதும் மக்களை இயக்கி அப்பணியில் ஈடுபட்டார்கள் என்று சொல்லிவிட முடியாது. ஆனால் ஞானசம்பந்தப்பெருமான் மக்களை இயக்கியே அவர்களுடனே வாழ்ந்து தமது அருட்பாடல்களை ஆக்கியுள்ளார். தமிழ்நாட்டுத் தலங்கள்தோறும் சென்று மூலை முடுக்குகளெல்லாம் தெய்வீகமும் செந்தமிழும் கலந்தோட வழிகாட்டியவர் இவர். ஏறக்குறைய இருநூறு தலங்களை இவர் தரிசித்துப் பதிகம் பாடியுள்ளார். இயற்கை எழிலை இறையெழிலாகக் காட்டிய குழந்தைக்கவி இவர்.

**"சிறையாரும் மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்**
**முறையாலே யுணத்தருவன் மொய்பவளத் தொடுதரளம்**
**துறையாருங் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்**
**பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயே."**

குழந்தைகளுக்கு அன்னம், கிளி, யானை, தும்பி என்றால் அலாதியான பிரியம். அவற்றோடு பேசுவது போன்ற உணர்வு தோன்றும். இங்கே கிளிக்குக் கொடுப்பன வெல்லாவற்றையும் கொடுத்து அதன் வாயிலேயிருந்து இறைவனுடைய நாமத்தைக் கேட்க ஆசைப்படுகிறார் ஞானச்சிறுவர். அதன் உள்ளீடாக இறையுணர்வை எழுப்புகிறார். இறைவனின் நாமத்தை ஒரு தரம் சொன்னாலே கோடி பயனுண்டு. இங்கே கிளியிடமும் ஒருமுறையாவது பேசும்படி கேட்கிறார்.

ஞானச்சிறுவன் திருவையாற்றுத் தலத்திலே கண்ட காட்சிகளை இனிக் கவனிப்போம். அங்குள்ள வீதிகளிலே தேவப்பெண்கள் வலம் வந்து நடனமாடுகின்றனர். அவர்கள் நடனத்திற்கு ஏற்ப முழவுச்சத்தம் அமைந்திருக்கின்றது. முழவின் அதிர்ச்சி இடிமுழக்கம் போல ஒலிக்கிறது. இதனைக் கேட்ட குரங்குகள் எல்லாம் மழை வருமோ என்று அஞ்சுகின்றன. மரங்களிலே ஏறி நுனிக்கொம்பிலே இருந்து வானத்தை நோக்குகின்றன. அங்கே மழை வரும் அறிகுறிகள் இல்லாமைமையால் அச்சம் நீங்குகின்றன. இங்கே மந்திகளின் அச்சம் நீங்குவதுபோல் ஆன்மாக்களின் அவலமும் திருவையாற்றுப் பெருமானைச் சரணடைந்த அளவில் நீங்குகின்றது என்பதை அழகாகக் காட்டுகிறார் திருஞானசம்பந்தர்.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைம்மே லுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள்செய்வா னமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே

மற்றோரிடத்தில், திருக்கேதாரத்தலத்தின் இயற்கை எழிலை
'வண்டு பாட மயிலால மான்கன்று துள்ள வரிக்
கெண்டை பாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே'
என்று பாடினார். நீலமொட்டு அலருவதுபோல் அன்பர்களின் உள்ளங்களை மலர்விக்கும் ஆலயம் திருக்கேதாரமாகும்.

திருவீழிமிழலையில் இன்னொரு இறையுணர்வை எழுப்புகிறார்,

"ஆறாடு சடைமுடியன் அனலாடும்
மலர்க்கையன் இமையப் பாவை
கூறாடு திருவுருவன் கூத்தாடுங்
குணமுடையோன் குளிருங் கோயில்
சேறாடு செழுங்கழுநீர்த் தாதாடி
மதுவுண்டு சிவந்த வண்டு
வேறாய உருவாகிச் செவ்வழிநற்
பண்பாடும் மிழலை யாமே"

கருநிறமுள்ள வண்டுகள் எல்லாம் திருவீழிமிழலைத் தலத்திலுள்ள செங்கழுநீரில் படிகின்றன. சிவந்த மலர்த்தாதுகள் வண்டுகளில் ஒட்டிக்கொள்கின்றன. அத்துடன் மலரிலுள்ள மதுவை நன்றாகப் பருகிவிட்டுக் களிப்புற்ற நிலையில் காட்சி தருகின்றன. வண்டுகளின் புதிய வடிவமும் புதிய மகிழ்ச்சியும் அவைபாடும் செவ்வழிப் பண்ணும் சேர்ந்து ஆண்டவன் திருவடிக்காளாய அன்பர்கள் ஞாபகத்தை ஊட்டுகின்றன. வண்டுகள் கருமை மாறிச் செம்மையுற்றுப் புத்துணர்வு பெற்றதுபோல் உயிர்கள் பாசங்கெட்டுச் சிவத்துவம் பெற்றன என்பதையும் உணரவைக்கிறார்.

பாடல் யாப்பு முறை வரலாற்றிலேயும் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியவர் ஞானசம்பந்தர் என்றால் அதில் மிகையொன்றுமில்லை. சங்ககாலத்தில் அகவலும் வஞ்சியும் கலியும் யாப்பாக

அமைய, சங்கம்மருவிய காலத்திலே வெண்பா யாப்பினாற் பாடல்கள் அமைந்தன. ஆனால் பல்லவர் காலத்தில் இதனைச் சிறிது மாற்றி விருத்தப் பாடல்கள் தோன்றின. சம்பந்தப்பெருமான் தனித்தனிப் பாடல்வகை பலவற்றை எடுத்தாண்டார். மாலைமாற்று, யமகம், ஈரடி, ஈரடிமேல்வைப்பு, மடக்கு முதலிய வகைகளில் அவர் பதிகங்கள் அமைந்து விளங்கின. இவற்றைத் தொகுத்து 'மூல இலக்கியம்' என்று கூறுகிறார் சேக்கிழார்.

**நாலடி மேல்வைப்பு மேன்மை நடையின் முடுகுமி ராகஞ்**
**சால்பினிற் சக்கரம் ஆதி விகற்பங்கள் சாற்றும் பதிக**
**மூல இலக்கிய மாக எல்லாப் பொருள்களும் முற்ற**
**ஞாலத் துயர்காழி யாரைப் பாடினார் ஞானசம்பந்தர்**

பெண்களைப் போற்றுவதிலும் பெருமைகண்ட நாடு தமிழ்நாடு. அது தமிழருடைய சிறப்பான நாகரிகமுங்கூட. சமண, பௌத்த நாகரிகம் இடைக்காலத்தில் தோன்றியதனால் தமிழ்ப் பண்பாட்டிற்கு சிறது இழிவு ஏற்பட்டது. இதனை நீக்குவதற்கு ஞானசம்பந்தப்பெருமானும் அப்பர் சுவாமிகளும் அரும்பாடு பட்டனர். தமது பாடல்களில் அம்மையப்பனைச் சமநிலையில் வைத்துப் போற்றியும் பெண்ணடியார்களின் தொண்டுகளை மதித்தும் பாடியுள்ளனர். திருஆலவாய்த் திருத்தலத்துக்கு எழுந்தருளி வந்த ஞானசம்பந்தர்,

**மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை**
**வரிவளைக் கைம்மட மானி**
**பங்கயச் செல்வி பாண்டிமாதேவி**
**பணிசெய்து நாடொறும் பரவ.......**

எனப்பாடி அரசியாரின் தொண்டுகளைப் பாராட்டியுள்ளார். காரைக்காலம்மையார் தலையாலே நடந்த பதியாகி திருவாலங்காட்டை மிதிக்க அஞ்சி விலகிச் சென்றார் என்பதும் குறிப்படத்தக்கது.

பெருமானுடைய அருள்வீரம் செறிந்த பாடல்களுக்கும் பல சான்றுகள் உள்ளன. பாண்டியன் அரண்மனையிலே, பெருங்கூட்டமான சமணகுருமார்கள் மத்தியிலே,

**'ஈனர் கட்கெளி யேனலேன் திரு**
**ஆலவாய் அரன் நிற்கவே'**

என்று பாடினார். 'நாளும் கோளும் நலமாயில்லை' என்றுரைத்த நாவுக்கரசரின் பரிவுணர்ச்சியை நினைந்து அடியார்களுக்கு நாளும் கோளும் நலிவுசெய்யா என்ற நம்பிக்கையை எடுத்துக்காட்டக் கோளறு பதிகத்தைப் பாடியருளினார்.

தந்தையார் வேள்வி செய்வதற்காகப் பொருள் கேட்டு நின்றபோது அதனைப் பெற்றுக் கொடுப்பான் பொருட்டு எம்பெருமானைப் பாடினார். பொருள் பெறச் சிறிது சுணங்கியபோது ஈகையின் சிறப்பை விளக்கி,

**" இதுவோ எமை யாளுமாறு ஈவதொன் றெமக் கில்லையேல்**
**அதுவோ நினதின்னருள் ஆவடு துறையரனே"**

எனப் பாடினார். இறையருள் நிரம்பிவழிந்த தன்மையிலே எழுந்த வாசகங்கள் இவை.

ஏழாவது நூற்றாண்டிலே ஒரு பொறுப்புவாய்ந்த தமிழ்ப் பெருந்தலைவராகவும், முதற்பெருங் குரவராகவும் இவர் விளங்கினார். பாண்டிநாட்டுக்கு வந்து தங்கியிருந்தபோது இவர் இருந்த மடத்துக்குச் சமணர்கள் தீ வைத்தனர். இதனை உணர்ந்த பெருமான் மக்களின் தீய செயலுக்கு மன்னனே காரணமென்பதை உணர்த்துமுகமாக, 'பையவே சென்று பாண்டியர்க் காகவே' என்று பாடினார். 'பையவே' எனப் பாடிய திறனை அருமையாகச் சேக்கிழார் எடுத்துக் காட்டி, பெருமானின் பொறுப்புணர்ச்சியை விளக்கினார்.

தந்தையார் ஒழுங்கு படுத்தியிருந்த திருமண வைபவத்தை முன்னிட்டுத் தனது உளப்பாங்கை எடுத்துக் காட்டுகிறார்:

**கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்**
**பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில**
**சொல்லூர்ப் பெருமணஞ் சூடல ரேதொண்டர்**
**நல்லூர்ப் பெருமணம் மேயநம் பானே**

அடுத்து, முதற்பெருங்குரவராக இவரைப் போற்றுவதற்குக் காரணம் என்னையெனில் பதிகந்தோறும் 8ஆம், 9ஆம், 10ஆம் திருப்பாடல்களை அமைத்துக்காட்டிய திருநெறியாகும். இராவணன் செயலைக்காட்டி, அவன் பெற்ற மன்னிப்பையும், பிரம விட்டுணுக்கள் தேடிக் காணாச் சோதி அடியவர்க்குக் காட்சி கொடுக்கும் திறனையும், புத்தரும் சமணரும் காட்டிய நெறியில் மயங்காது சைவத்தைச் சார்ந்து தெளிவடைய வேண்டும் என்பதையும் மிகச் சிறப்பாக விளக்கியருளினார். இவ்வாறு இவர் பாடியருளிய முதல் முன்று திருமுறைகளிலும் இன்று 384 பதிகங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் 4184 பாடல்கள் அடங்கியுள்ளன. இவையாவும் சிவமணமும் தமிழ்மணமும் கலந்து மிளிர்வன, ஞானக் கருவூலமாக அமைந்து எம்மனைவரையும் ஞானவழியிற் செலுத்துவன, நாளும் அவற்றைப் ஓதிப் பலனடைவோமாக.

**நந்தி நாமம் நமச்சிவா யவெனும்**
**சந்தை யாற்றமிழ் ஞான சம்பந்தன்சொல்**
**சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெல்லாம்**
**பந்த பாசம் அறுக்கவல் லார்களே"**

**

## அமுதகவித்தொடை

**திருஞானசம்பந்தப் பெருமானின் திருப்பாடல்களில் உள்ள கவிநயத்தை உணர்ந்து சுவைத்தவர்கள் பலர். அவர்களுள் அருணகிரியாரும் ஒருவர். அதனாலேதான் அவர் வாயிலிருந்து இந்த அடிகள் உதிர்ந்தன.**

"புமியதனிற் பிரபுவான புகலியில்வித் தகர்போல
அமுதகவித் தொடைபாட அடிமையெனக் கருள்வாயே"

**இந்தப் பூமியிலே பிரபுவாக விளங்கிய திருப்புகலி என்ற ஊரில் அறிஞரான திருஞான சம்பந்தப் பெருமானைப்போல அமுதமாகக் கவிபாட எனக்கு அருளமாட்டாயா? என்று முருகனிடம் இறைஞ்சுகிறார் அவர்.**

# மஹாராஷ்டிரம்

- பயணக்கட்டுரை

சாவகச்சேரியூர் டாக்டர் க. கதிர்காமநாதன்

## அறிமுகம்

மஹாராஷ்டிரம் இந்தியாவில் மேற்குத் திசையில் அரபிக் கடலோரமாக அமைந்த மாநிலமாகும். இதன் கடற்கரை 330 மைல் நீளமானது. வடமேற்கிலே குஜராத், வடகிழக்கிலே மத்தியப்பிரதேசம், தெற்கிலே கர்நாடகம், தென்கிழக்கிலே ஆந்திரா, தென்மேற்கிலே கோவா என மாநிலங்கள் இதன் எல்லைகளாக உள்ளன. இந்தியாவிலுள்ள மாநிலங்களிலே மூன்றாவது பெரிய மாநிலம் இதுவாகும். ஆனால் மக்கள் தொகையில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

கடலோடு மலைகள், மரங்கள், வாவிகள், நதிகள், அஜந்தா ஓவியக் குகை, எல்லோரா குகைகள், ஜோதிர்லிங்கங்கள் ஆகியவை உள்ள இடம் இது. இங்கு இந்து மதத்தவர் 86.37%, இசுலாமியர் 10.60%, கிறித்துவர் 1.09% வாழ்கின்றனர். இங்கு பேசும் மொழி மராட்டி. மாநிலத்தின் தலைநகர் மும்பை. முன்பு பம்பாய் என்று இருந்தபெயர் 1996இல் மீண்டும் மும்பை ஆகியது. மதராஸ் என்ற தமிழ் மாநிலத்தின் தலைநகர் சென்னை என்று மாறியதை நாம் நோக்கலாம். மும்பைதான் இந்தியாவின் பொருளாதாரதுக்குத் தலைநகர்.

ஆசியாவிலேயே முதன்முதலாகப் புகைரதசேவை மும்பைக்கும் தேனிக்கும் இடையிலே தான் ஆரம்பித்தது. மும்பை “பாலிவுட்” திரைப்பட உலகிலே மிக மிகப் பிரபாலமானது என்பது பலரும் அறிந்த விடயமே.

## பயணம்

நாம் இங்கிருந்து புறப்பட்டு மும்பை விமானநிலையத்தை அடைந்தோம். அங்கே மனைவியையும் என்னையும் விடுதிக்கார் வந்து அழைத்துச்சென்றது. மறுநாட்காலை, வெள்ளிக்கிழமை விடியுமுன்னரே நாங்கள் எழுந்து நீராடி, புறப்பட ஆயத்தமானோம். அப்போது ஒரு கோயில் மணியோசை கேட்டது. விரைந்து சென்று வெளியே பார்த்தபோது விடுதிக்கு மிக அருகில் இருக்கின்ற ஆஞ்சநேயர் கோயிலிலே பூசை ஆரம்பமாகியது. பலமும் பாதுகாப்பும் அளிக்கும் ஆஞ்சநேயரைத் தரிசித்துவிட்டு, காரிலே வினை தீர்க்கும் விநாயகரைத் தரிசிக்கச் சென்றோம்.

## சித்திவிநாயகர் கோயில்

கோயில் செல்லும் வழியிலே ஒரே மக்கள் கூட்டமும் வாகன நெரிசலுமாக இருந்தது. தூசி நிறைந்த தெருவின் இருபக்கமும் சேரிக் குடிசைகள் இருந்தன. வீதியில் மிருகங்கள் நடமாடின. அதனால் நமது கார் மிக மெதுவாகவே சென்றது.

கோயில் பிரதான வீதியில், கடைகளும் வாகனங்களும் நிறைந்த இடத்திலே இருக்கிறது. எங்களைக் கோயிலின் அருகில் இறக்கிவிட்டு காரை வேறிடத்திலே நிறுத்தச் சாரதி

சென்றுவிட்டார். கோயிலின் கோபுரம் மிக உயர்ந்து நிற்கிறது, கலசத்தை அண்ணார்ந்துதான் பார்க்கவேண்டும். பிரமாண்டமான, புகழ் மிக்க கோயில் அது. விநாயகருக்கு இவ்வளவு பெரிய கோயிலா? என்று வியந்தேன்.

இந்த விநாயகர் கோயிலுக்கு வழிபட எம்மதத்தவரும் செல்லலாம். சாதாரண நாள்களில் சுமார் இருபத்தையாயிரம் மக்கள் தரிசனம் செய்வர். விசேட நாள்களில், செவ்வாய்க் கிழமைகளில் சுமார் ஒரு இலட்சம்பேர்வரை தரிசனம் செய்வர்.

## வரலாறு

இந்தக் கோயிலின் வரலாறு கோயிலைப்போலவே மிகவும் பிரமிக்கத்தக்கது. 1801ஆம் ஆண்டில் 3.6 மீட்டர் நீள, அகலம் கொண்டதாக இந்தக் கோயில் இருந்தது. அரசியல்வாதிகளாலும் “பாலிவுட்” சினிமாக் காரர்களாலும் கிடைத்த ஆதரவால் 2550 சதுர மீட்டர் அளவுக்கு இக்கோயில் வளர்ந்துள்ளது. கோயிலோடு மக்கள் தங்குமிடமும் காவற் துறையினர் தங்கும் வீடுகளும் உண்டு.

“விருப்பங்கள், ஆசைகள் தீரவேண்டுமானால் சித்திவிநாயகரிடம் செல்லுங்கள்” என்றொரு நம்பிக்கை இங்குள்ளோரிடம் திடமாக உண்டு. கோயிலில் நுழைய, சனநெருக்கடியைச் சமாளித்து மணிக்கணக்கில் வரிசையில் நின்று ஒருவாறு உள்ளே சென்றோம். கோயிலின் உட்புறக்கூரை தங்கத்தால் ஆனது. விநாயகரோ மிகவும் சிறியவர். இரண்டரை அடி உயரமும் இரண்டடி அகலமுங் கொண்ட ஒரே கல்லிற் செதுக்கிய சிலை. தும்பிக்கை வலப்புறமாக வளைந்துள்ளது. வலஞ்சுழி விநாயகர் என்று இதைச் சொல்வர். ‘கடுகு சிறிதானாலும் காரம் பெரிது, மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது’ என்றெல்லாம் சொல்வார்கள். இந்த விநாயகருக்கு அது பொருந்தும். வலது மேற்திருக்கையிலே தாமரை, வலது கீழ்த் திருக்கையிலே ஜபமாலை, இடது மேற்றிருக்கையில் மழு, இடது கீழ்த்திருக்கையில் மோதகம் ஆகியவை தரித்து இருந்து அருள் பாலிக்கிறார். நெற்றிக்கண்ணும் உண்டு. சற்றுப் பின்னால் சித்தி, புத்தி ஆகிய சத்திகள் உளர். அதனால் இவர் சித்திவிநாயகர்.

காலை 5.30 முதல் 6.30 வரையும், மாலை 7.30 முதல் 8.00 மணிவரையும் ஆர்த்தி, அதாவது தீபாராதனை நடைபெறுகிறது. மேளதாளத்தோடு நடக்கும் இந்த வைபவத்தில் சிவாசாரியர் மந்திரங்களை ஓதுவார். இறுதியில் மகாமந்திரமும் ஓதுவார். மக்களும் சேர்ந்து பரவசமாகப் பாடுவர். மதியம் 12.15 தொடக்கம் 12.30 வரை நைவேத்தியம் நடைபெறுகிறது. இவைதவிர, சாதாரண தரிசனம் இரவு 10 மணிவரை உண்டு. கோயில் எப்போதும் காலையிலிருந்து திறந்தே இருக்கும்.

இந்த இடத்திலே திருடர் பயம் உண்டு. அதனால் முதலில் நானும் பின் என் மனைவியுமாக, ஒருவர் பணம், பயண ஆவணங்களை வைத்திருக்க மற்றவர் சனநெரிசலிற் சென்று வழிபட்டு வந்தோம்.

இந்தக் கோயில் டாடார் ரயில் நிலையத்திலிருந்து இருபது நிமிட நடைதூரத்தில் பிரபாவதி என்ற இடத்தில் உள்ளது. செல்வச் செழிப்பான கோயில் இது. 2013இல் சிறந்த அறக்கட்டளை என்ற விருதும் பெற்றுள்ளது.

### விநாயகர் சதுர்த்தி விழா

இந்த விழா சுவாரஸ்யமாகவும் திகைப்பூட்டுவதுமாக எமக்கு இருந்தது. கொல்கத்தா வாசிகளுக்குக் காளி எவ்வாறோ, அதுபோல மும்பை வாசிகளுக்கு மூஷிக வாகன, மோதகப்பிரிய கணநாதன் இருக்கிறார். விநாயகர் பெருமையே பெருமை.

விழாவின் வரலாறும் விழாவைப்போலவே சுவையாக இருக்கிறது. பிரபல மராட்டி மன்னன் சத்திரபதி சிவாஜி மகாராஜா கலாசாரத்தையும் தேசிய உணர்வையும் உண்டாக்க விநாயசதுர்த்தி விழாவை ஆரம்பித்தார். சுதந்திர உணர்வுடைய அரசியல்வாதியாகிய லோகமான்ய பாலகங்காதர திலகர் 1893இல் இவ்விழாவைப் பொதுத் தேசிய விழாவாகக் கொண்டாட வழிவகுத்தார். அன்றைய பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக மக்களை ஒன்றுபடுத்த எண்ணியே சாதி, மத பேதமற்ற விழாவாக இதை மாற்றினார்.

ஆவணிச் சதுர்த்தி பிள்ளையார் தோன்றிய நாள். இது நாலாம் பிறையன்று வருகிறது. நாலாம் பிறை பார்த்தால் தீமை உண்டாகும் என்று ஒரு நம்பிக்கை சிலரிடம் உண்டு. மும்பையிலும் நாலாம் பிறையைப் பார்க்கக்கூடாது என்ற நம்பிக்கை உள்ளது. விழா சதுர்த்தியன்று தொடங்கிப் பத்து நாள்கள் கொண்டாடப்படுகிறது. பத்தாவது நாள் ஆனந்தசதுர்த்தி என்று அழைக்கப் படுகிறது. இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னரே விழா ஏற்பாடுகள் ஆரம்பித்துவிடும். ஒன்பது அங்குலத்திலிருந்து இருபத்தைந்து அடி உயரம் வரை பல்வேறு அளவுகளில் களிமண் கொண்டு விநாயகர் சிலைகளைச் செய்வார்கள். அதற்கென உரிய கலைஞர்களால் வடிவமைக்கப்பட்டு, இச் சிலைகள் பல வண்ணங்களிலே கடைகளில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். நின்ற நிலையில், இருந்த நிலையில் (பத்மபீட கணபதி) எலி வாகனத்தில், பார்வதியின் மடியில், உமாமகேசுவர கணபதி, சித்தி - புத்தி சமேத கணபதி, மஹாராஷ்டிர கணபதி (பெரிய தலைப்பாகையும் மேலாடையும் அணிந்து) எனப் பல தோற்றங்கள் அங்கே இருக்கும். இது தவிர, காந்தி குல்லா அணிந்து பஞ்சகச்சம் கட்டி, ஜிப்பா தரித்த பிள்ளையார், வெறுந் தலையுடன் நாகரிக கணபதி, தேசபக்த சாயலில் கணபதி எனப்பல தோற்றங்களிற் கணபதி இருக்குங் காட்சி வெகு மாட்சியாக இருக்கும். சிறு பிள்ளைகளும் ஏழை மக்களும் மற்றோரும் பங்குபற்ற, சிறுதொகைப் பணத்திலிருந்து பெருந்தொகைவரை பெறுமதியுள்ள விதவிதமான விநாயகர்கள்!

ஒவ்வொரு குடும்பத்திலும் தாய் தகப்பன் பிள்ளைகள் ஒன்றுசேர்ந்து சென்று விரும்பும் பிள்ளையாரை வாங்குவர். விக்கிரகத்தைப் பெறும்நாளே ஒரு விழாவாக இருக்கும். பின்னர் மேளதாளத்தோடு வீட்டுக்குக் கொண்டுவந்து மண்டபத்திலோ, பீடத்திலோ வைப்பார்கள். அலங்கரிப்பும் நடைபெறும். குடும்பம் முழுவதும் ஒவ்வொருநாளும் நீராடி, வீட்டைப் புனிதமாக்கி பயபக்தியுடன் மணியடித்துத் தீபம் காட்டி மலர்களால் அர்ச்சித்து 21 மோதகங்கள் 21 இலைகள் பட்சணங்களை நைவேத்தியமாக வைத்து தூபம் காட்டி வணங்கி மகிழ்வர். ஆவணிச் சதுர்த்தி தொடக்கம் பத்து நாள்கள் இவ்வைபவம் நடைபெறும். இதேபோன்று கடைகளிலும் வியாபாரத் தலங்களிலும் சங்கங்களிலும் பிரதான வீதிகளிலும் போட்டா போட்டி போட்டு விமரிசையாக விழாவைக் கொண்டாடுவர். இங்கு புரோகிதர்கள் வந்து பஞ்சோபசார பூசை செய்து மந்திர உச்சாடனஞ்செய்து மக்களோடு 'மங்கள மங்கள கணேசா' போன்ற பக்திப்பாடல்களைப் பாடித் தெய்வீகத் தன்மையைத் தோற்றுவிப்பர்.

பத்தாம் நாள் ஆனந்தசதுர்த்தியன்று மக்கள் வெள்ளம் கரைபுரளும். அன்று விடுமுறை தினமுமாகும். குழந்தைகள் பெண்கள், ஆண்கள், முதியோர், இளையோர் ஆன்மிகவாதிகள்



சந்நியாசிகள் ஏழைகள் பணக்காரர் இந்துக்கள், இசுலாமியர், கிறித்து வர்கள் அனைவரும் இன, மத, வகுப்புப் பாகுபாடின்றி ஒன்றுகூடி இப்பெரு விழாவிலே பங்குபற்றுவர். இவ்விழாவில் பலரும் தமது திறமை களைக் காட்டுவர். பாடுவோரும் ஆடுவோரும் நாடகம் நடிப்போரும் வாத்தியக் கருவிகள் இசைப்போரும் தம் கைவரிசையைக் காட்டுவர். ஏழைகளுக்குப் பணம் கொடுப்போரும் உணவு, தேநீர் பானம் கொடுத்து மகிழ்வோரும் ஏராளம். இது பலருக்கும் உழைப்பும் ஊதியமும் கொடுக்கும் விழாவாகவும் தான தருமங்கள் செய்யும் விழாவாகவும் இருக்கும். மக்களுக்கு வைத்திய சேவை, சுகாதாரம் உணவு வகைகள் அறிவுரைகள் யாவும் இலவச சேவையாகவே வழங்கப்படும். தகுந்த பாதுகாப்பைக் காவற் துறை வழங்கும்.

குழந்தைகள் தங்கள் சிறு கணபதி சிலைகளைத் தலையில் வைத்தோ அல்லது கைகளிலே தூக்கியோ கொண்டு வருவர். சிலர் அலங்கார வண்டியிலே இருத்திச் செல்வர். வேறுசிலர் தேரிலே பிள்ளையாரை வைத்து இழுத்துச்செல்வர். மக்கள் ஒன்றாக ஜயகோஷம் செய்து ஆடிப்பாடி எடுத்துச் செல்வர்.

இந்த நாளில் ஹோமம் மந்திர பாராயணம் மங்கள ஆரத்தி எடுத்து சகல கௌரவம், மரியாதைகளொடு பிள்ளையாரை வழியனுப்புவர். “கணபதிப் பப்பா” என்று தமது மொழியிலே பாடிக் கடலிலே அமிழ்த்த முன்னர் ‘மீண்டும் வருக, மீண்டும் வருக அடுத்த வருடம்’ எனப் பவ்வியமாக அழைப்பர். விநாயகர் தங்களுடைய விக்கினங்களைத் தீர்த்துப் பாவங்களை எடுத்துச் சென்று கடலில் விடுகிறார் என்ற நம்பிக்கை மக்களுக்கு உண்டு.

குழந்தைகள், தங்களோடு பத்து நாள்கள் ஒன்றாக இருந்து குடும்பம் சேர்ந்து பூசை செய்ய, அதை ஏற்று, பின்னர் பட்சணங்கள் தந்தவர் கடலிலே போய்விட்டாரே எனக் கதறி அழுவர். பெரியவர்களும் மிக வருத்தத்துடன்தான் பிரிவார்கள். இப்பிரிவு ஒரு “தியாகம்” ஆகும். தியாக மனப்பான்மையை வளர்க்கும். மகாத்மாவைத் தந்த தியாகபூமி அல்லவா?

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

**

# சிவனடியார் நிந்தை சிவநிந்தையே!

தொகுப்பு: இ.லம்போதரன்

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

-சுந்தரர் தேவாரம்

பிறரைக் குறைகூறுவதையம் குறைவாகப் பேசுவதையும் தவிர்க்க வேண்டும். இது கொடிய பாவம். இது கடவுளைத் தூஷிப்பதாகும். எவராவது பிறரைத் தூஷணை செய்தால், செய்தவரை அடித்துத் திருத்தினாற்கூடத் தவறில்லை. ஏனெனில் அந்தக் குணத்தை எப்படியும் ஒழிக்க வேண்டும். (குறிப்பு: சாயிபாபா வன்முறையை எந்த இடத்திலும் பரிந்துரைத்ததாகச் சரித்திரமே இல்லை, இந்த இடத்தைத் தவிர - சாயிபாபாவின் பஞ்ச இரத்தினச் சொற்பொழிவு: 23 நவம்பர் 1987)

சிவனடியாரை நிந்தை செய்து பேசியவர்களின் நாவை அறுத்தவர் அறுபத்து மூன்று நாயன்மார் களில் ஒருவராகிய சத்தி நாயனார். அவரின் சிவப்பணி மேற்கூறிய கருத்தால் ஆழமாகப் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

எவரையும் தூஷிக்காலாகாது, எவரையும் தாக்கிப் பேசக்கூடாது. பிரேமையை உள்ளத்தில் நிரப்புதல் வேண்டும். இதுவே சரியான சாதனை (சாயிபாபாவின் பஞ்ச இரத்தினச் சொற்பொழிவு: 23 நவம்பர் 1987)

பிறரைப்பற்றித் தூஷித்தோ, கண்டனம் செய்தோ பேசுவது மிகக்கொடிய செயலாகும். இது ஒரு பெரிய நோய் போன்றது. இந்த நோய்க்கு மருந்தே கிடையாது. மிகவும் கொடிய புற்றுநோயெனவே இதைக் கருதவேண்டும். பிறரைத் தூஷிப்பதால் நம் அறிவு கெட்டு விடுகிறது. இதனால் நாம் அநேக பிரசினைகளையும் பாதிப்புக்களையும் அநுபவிக்கவேண்டிவரும். தூஷணையைத் தவிர்க்கவும் பலாத்காரத்தில் ஈடுபடும் எண்ணத்தைத் தவிர்க்கவும் மனதிலே தெய்வ சிந்தனையையும் தூய்மையான அன்பையும் வளர்த்துக் கொள்ளுங்கள். இப்படிப்பட்ட உண்மையான அன்புடன் பிறரை நேசித்தால் தெய்வாநுக்கிரகம் உங்களுக்குத் தானாகவே கிட்டிவிடும்.

பரஇம்சை, பரதூஷணை இரண்டையும் கட்டாயமாகத் தவிர்த்தல் வேண்டும். பிறரைத் தூஷிக்கும்போது, நீங்கள் தெய்வத்தையே தூஷிப்பதாகும். ஏனெனில் அனைவரும் பரமாத்மாவின் ஸ்வரூபங்களே. இதுவே சத்தியமான வாக்கு. ஆகவே பிறரை வெறுப்பதையோ

கண்டனம் செய்வதையோ அடியோடு நிறுத்திவிட வேண்டும். உங்கள் அகங்காரத்தையும், ஆடம்பரத்தையும் பெரிதாகக் கருதியே பிறரை வேறுபாட்டுடன் நோக்குகின்றீர்கள். இது மாபெரும் தவறு. (சாயிபாபாவின் பஞ்ச இரத்தினச் சொற்பொழிவு: 23 நவம்பர் 1987)

## குருவையும் சிவனடியாரையும் யாது செய்தல் வேண்டும்?

அவர்களை மனிதர் எனக் கருதாது, சிவபெருமானே எனக் கருதி மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் சிந்தையோடு வழிபடல் வேண்டும். பிரதிட்டை செய்து பூசிக்கப்படும் சிவலிங்கத்தைச் சிலையென்று நினைந்து அவமதிப்பவரும், சிவதீட்சை பெற்று இயன்ற மட்டும் விதிப்படி அநுட்டிக்கும் சிவபத்தரை மனிதர் என்று நினைந்தேனும் அவருடைய பூர்வ சாதியை நினைந்தேனும் அவமதிப்பவரும் தப்பாது நரக்தில் வீழ்வர் ( ஆறுமுகநாவலரின் இரண்டாம் சைவ வினாவிடை *336*).

## சிவனடியாரை வழிபடாது, சிவலிங்கத்தை மாத்திரம் வழிபடலாகாதா?

ஒருவன் ஒரு பெண்ணிடத்து அன்புடைமை அவளுடைய சுற்றத்தாரைக் கண்டபொழுது அவனுக்கு உண்டாகும் அன்பினளவு பற்றித் தெரியப்படும். அதுபோல, ஒருவன் சிவபெருமானிடத்து அன்புடைமை அவருடைய அடியாரைக் கண்டபொழுது அவனுக்கு உண்டாகும் அன்பினளவு பற்றித் தெளியப்படும். ஆதலினாலே சிவனடியாரிடத்து அன்பு செய்யாது அவமானம் செய்துவிட்டுச் சிவலிங்கப்பெருமானிடத்தே அன்புடையார்போல் ஒழுகுதல் வயிறு வளர்ப்பின் பொருட்டும், இடம்பத்தின் பொருட்டும் நடித்துக் காட்டும் நாடக மாத்திரையே அன்றி வேறில்லை. (ஆறுமுகநாவலரின் இரண்டாம் சைவ வினாவிடை *338*.)

## குருவுக்கும் சிவனடியார்க்கும் செய்யத்தகாத குற்றங்கள் எவை?

கண்டவுடன் இருக்கை விட்டெழாமை, அவர் எழும்பொழுது உடன் எழாமை, அவர் திருமுன்னே உயர்ந்த ஆசனத்தில் இருத்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல், சயனித்துக் கொள்ளுதல், வெற்றிலை பாக்குப் புசித்தல், போர்த்துக்கொள்ளுதல், பாதுகையோடு செல்லல், சிரித்தல், வாகனமேறிச்செல்லல், அவராலே தரப்படுவதை ஒரு கையால் வாங்குதல், அவருக்குக் கொடுக்கப்படுவதை ஒரு கையாற் கொடுத்தல், அவருக்குப் புறங்காட்டல், அவர் பேசும்பொழுது பாராமுகஞ் செய்தல், அவர் கோபிக்கும்பொழுது தாமும் கோபித்தல், அவருடைய ஆசனம், சயனம், வஸ்திரம், குடை, பாதுகை முதலியயவைகளைத் தாம் உபயோகித்தல், தனது காலினாலே தீண்டல், அவரது திருநாமத்தை மகிமைப் பொருள்படும் அடைமொழியின்றி வாளாச் சொல்லல், அவரை யாராயினும் நிந்திக்கும்பொழுது காதுகளைப் பொத்திக்கொண்டு அவ்விடத்தினின்று நீங்கிவிடாது கேட்டுக்கொண்டிருத்தல் முதலியவைகளாம் (ஆறுமுகநாவலரின் இரண்டாம் சைவ வினாவிடை *349*.)

## தான் வழிபட்டுவந்த ஆசாரியன் பெரும் பாவங்களைச் செய்வானாயின் அவனை யாது செய்தல் வேண்டும்?

தானே பூசித்து வந்த சிவலிங்கம் அக்கினியாலே பழுதுபடின் அதனை இகழாது மனம் நொந்து கைவிட்டு வேறொரு சிவலிங்கத்தைக் கைக்கொள்வதுபோலத் தான் வழிபட்டுவந்த ஆசாரியன் சிவநிந்தை, சிவத்திரவிய அபகாரம் முதலிய பெரும்பாவங்கள் செய்து கெடுவானாயின் அவனை இகழாது மனம் நொந்து கைவிட்டு வேறொராசாரியாரை அடைந்து வழிபடல் வேண்டும். - (ஆறுமுகநாவலரின் இரண்டாம் சைவ வினாவிடை *354*.)

ஆண்டான் அடியவ ரார்க்கு விரோதிகள்
ஆண்டான் அடியவர் ஐயமேற் றுண்பவர்
ஆண்டான் அடியாரை வேண்டாது பேசினோர்
தாந்தாம் விழுவது தாழ்நர காகுமே

-திருமந்திரம் 537

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தம் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடும்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே

-திருமந்திரம் 532

* உலகில் யாதவன் (பசுக்களைப் பரிபாலிக்க) கையிலே கோல் கொண்டு வருவதைப்போல, கடவுள் மக்களைக் காப்பதற்காகக் கையிலே கோல் கொண்டுவருவதில்லை. ஆனால், கடவுள் தன்னை வழிபடுகிறவர்களுக்கு நற்புத்தியைக் கொடுக்கிறார். அப்புத்தியினால் மக்கள் தம்மைக் காத்துக்கொள்ளவேண்டும்.

* மனிதன் ஆசையினாலும் அறியாமையினாலும் இரக்கத்தினாலும் அச்சத்தினாலும் பிறருக்காகப் பாவங்களைச் செய்கிறான். அறம், பொருள், இன்பம் இந்த மூன்றே உயிர்வாழ்க்கையின் பலன்களாகும். ஆகவே ஒரு மனிதன் அதர்மத்தை விட்டுவிட்டு அறம் முதலானவற்றைச் சம்பாதிக்கவேண்டும். ஏனெனில், தருமந்தான் பரலோகத்துக்குத் துணை.

திருமுருக கிருபாநந்தவாரியார்

**If you would like your Kalasam to be sent to your home address, please fill in the form below and send it to us with your payment.**

**கலசம்**
**KALASAM**

இலவச காலாண்டிதழ்

**கலசம் உங்கள் வீடுதேடி வரவேண்டுமா?**

இப்படிவத்தை நிரப்பி அனுப்புங்கள்!

பெயர் :.............................................................................

முகவரி :.............................................................................

.............................................................................

.............................................................................

.............................................................................

Donation: £.................

Postage: £.................

Total £.

Kalasam
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

kalasam@hotmail.com

Postage and admin : £10 (U.K/Europe) : £ 20 (Rest of the world) (இரு வருடங்களுக்கு)

# திருவைந்தெழுத்து

- க.செல்வரத்தினம்

இறைவன் நமக்கு இச்சரீரத்தைத் தந்தது அவரை வழிபட்டு முத்தியடைவதற்காகவே என்பது நாவலர் பெருமானின் அருளுரையாகும். மனித உடலமைப்பும் திருவைந்தெழுத்துக்கு ஓரளவு ஒத்துப்போகிறதாகக் கொள்ளமுடியும். வீடுபேறு அடையும் சாதனங்கள் திருநீறு, உருத்திராட்சம், திருவைந்தெழுத்து எனலாம். முதல் இரண்டும் புறச் சாதனங்கள். ஆனால் திருவைந்தெழுத்து அகச் சாதனமாகும்.

திருமுறைகளிலும், மெய்கண்டசாத்திரங்களிலும் திருவைந்தெழுத்தின் பெருமைகள் பரவலாக வந்துள்ளன. இந்த ஐந்தெழுத்து மந்திரம் நினைப்பவரைக் காப்பது. இதனை எப்போதும் எந்த நிலையிலும் அகத்திலே அணிபெறச் செய்தல் வேண்டும்.

ஔவை மூதாட்டியும் நல்வழியில்,

**'சிவாயநம' வென்று சிந்தித் திருப்போர்க்**
**கபாயம் ஒரு நாளும் இல்லை - உபாயம்**
**இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்**
**விதியே மதியாய் விடும்**

எனக் கூறியுள்ளார். இதை 'ஐந்தெழுத்து' எனவும் 'பஞ்சாட்சரம்' எனவும் உணர்த்துவர். இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெயர்ச்சொற்களாக அமையும். சி - சிவத்தையும், வ - திருவருளையும், ய - உயிரையும், ந - மாயையையும், கன்மம், திரோதான சக்தியையும். ம - ஆணவ மலத்தையும் குறிக்கும். ஆகவே பதி. பசு. பாசம் என்பனவே திருவைந்தெழுத்து உணர்த்தும் பொருள்களாகும்.

சிதம்பரத்திலே அந்தணர்களால் ஏற்ற முடியாத கொடியை ஏறச்செய்தவர் உமாபதி சிவாசாரியார் அவர்கள். இவர் அருளிய நூலே 'கொடிக்கவி' யாகும். திருவைந்தெழுத்தின் வகைகள்:-

தூல பஞ்சாட்சரம், சூக்கும பஞ்சாட்சரம், காரண பஞ்சாட்சரம், மகாகாரண பஞ்சாட்சரம், அதிசூக்கும பஞ்சாட்சரம் என ஐந்து வகையாகக் கூறுவர். தூல, சூக்கும பஞ்சாட்சரம் கொடிக்கவியில் ஐந்தெழுத்து எனப்படும். "ஓம் சிவய" என்பது நாலெழுத்து எனப்படும். பிஞ்செழுத்து = சிவ, பெருவெழுத்து = சி.

**"அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்**
**பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் -நெஞ்சமுத்திப்**
**பேசும் எழுத்துடனே பேச எழுத்திணையும்**
**கூசாமல் கட்டக் கொடி."**

ஆகவே பஞ்சாட்சரப் பயனைச் சிவபெருமான் அடியார்களுக்கு அருளுவார்.

சிவவாக்கியச் சித்தர் பாடல்:

**நவ்விரண்டு காலதாம் மவ்விரண்டு வயிறதாம்**
**சிவ்விரண்டு தோளதாம் வவ்விரண்டு வாயதாம்**
**யவ்விரண்டு கண்ணதாய் அடைந்து நின்ற தேகமே**
**ஒவ்வுகின்ற ஓமிலே உதித்துநிற்ப தாகுமே."**

ந,ம,.சி,வா,ய எனும் ஐந்து எழுத்துக்களாகிய வடிவமே எமது உடல் அமைப்பு என அருளாளர்கள் அநுபவித்து காட்டும் முறையேயாகும். ஓம் என்ற ஒலியினைத் தலையெழுத்து என்றும் கூறுவார்கள்.

காற்பகுதி நோயைக் குணப்படுத்த "ஓம் நமசிவாய" என்றும், மார்புப்பகுதி நோயைக் குணப்படுத்த "ஓம் சிவயநம" என்றும் இவ்வாறு ம, ய எனும் ஒலிகளை நீட்டித்து உச்சரித்து பயன்பெற முடியும் என்பது நல்வழியே. ஒலிக்கூறுகள் காற்று மண்டலத்திலும், கடல் அலைகளிலும் எதிரொலிக்கின்றன. அருவிகளில், செம்பில், கல்லில் மறைந்து இருக்கின்றன. உயிரற்ற பொருள்கள்கூட ஓம் என்ற ஒலியால் உயிர்த்தன்மை பெறுகின்றன. திருவைந்தெழுத்தின் மகிமை. நால்வர் பாடல்களிலும், திருமூலர், நக்கீரதேவநாயனார், பட்டினத்தார் பாடல்களிலும், சிவஞானசித்தியார், நெஞ்சுவிடுதூது ஆகிய படைப்புக்களிலும் விரவிக் காணப்படுகின்றன.

பஞ்சாக்கரத் திருப்பதிகம்:

**'நல்லவர் தீயர் எனாது நச்சினர்**
**செல்லல் கெடச்சிவ முக்தி காட்டுவ**
**கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத்**
**தல்லல் கெடுப்பன அஞ்செழுத்தாமே' - திருஞானசம்பந்தர்**

நமச்சிவாயத் திருப்பதிகம்

**"காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி.....**
**நாதன் நாமம் நமச்சிவாயவே" - திருஞானசம்பந்தர்**
**"நற்றுணையாவது நமச்சிவாயவே" - திருநாவுக்கரசர்**
**"நற்றவா உனை நான் மறக்கினும்**
**சொல்லுநா நமச்சிவாவே" - சுந்தரமூர்த்தி சுவாமிகள்**
**"நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க" - மாணிக்கவாசகர்**
**"நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்" - மாணிக்கவாசகர்**
**"சிவசிவ என்னச் சிவகதிதானே" - திருமூலர்**
**"நின் அஞ்செழுத்தைச் சொல்லாப் பிழையும்....**
**பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே" - பட்டினத்தார்**

என பல சான்றுகளைப் பாரக்கின்றோம்.

ஐந்து எழுத்துமூலம் ஒவ்வோர் உள்ளத்திலும் ஐந்தெழுத்துச் சிந்தனை இடைவிடாது ஒலித்துக் கொண்டிருக்க வேண்டும். சிவம் முற்றறிவுடையது. ஆன்மா சிற்றறிவு உடையது. பாசக் கட்டுக்கு உட்பட்ட பொருளை ஆன்மா தனது என்று உரிமை பாராட்டும். இது மமகாரம் எனப்படும். அகங்காரத்தை நீக்கி, இறைவனுக்கு அர்ப்பணித்தால் அவன் திருவருளைப் பெறலாம். வாழ்விற்கு ஒளியூட்டுவது தெய்வ நம்பிக்கையாகும். துயரங்கள் விறகுக் கட்டானால் அதனைப் பொசுக்குகின்ற ஞானக்கனல் ஐந்தெழுத்தாகும். சைவ சமயத்தின் இம் மூலமந்திரமே நமசிவாய. "நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்" என்று போற்றுவதை நாமும் ஓதி வாழ்விற்கு உறுதுணை தேடிக் கொள்வோம்.

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட தினங்கள்

ஏப்பிரல் (14-01-2015) தொடக்கம் ஜுன் (30-06-2012) வரை

| | | |
|---|---|---|
| 14.04.2015 | செவ்வாய் | மன்மத வருடப்பிறப்பு |
| 16.04.2015 | வியாழன் | பிரதோஷம் |
| 01.05.2015 | வெள்ளி | பிரதோஷம் |
| 03.05.2015 | ஞாயிறு | சித்திரைப் பௌர்ணமி |
| 10.05.2015 | ஞாயிறு | நடேசர் அபிஷேகம் |
| 15.05.2015 | வெள்ளி | பிரதோஷம் |
| 22-05-2015 | வெள்ளி | சேக்கிழார் குருபூசை |
| 30.05.2015 | சனி | பிரதோஷம் |
| 04.06.2015 | வியாழன் | திருஞானசம்பந்தர் குருபூசை |
| 13.06.2015 | சனி | பிரதோஷம் |
| 15.06.2015 | திங்கள் | ஆனி உத்தரத் திருவிழா ஆரம்பம் |
| 21.06.2015 | ஞாயிறு | மாணிக்கவாசகர் குருபூசை |
| 24.06.2015 | புதன் | நடேசர் அபிஷேகம் |
| 29.06.2015 | திங்கள் | பிரதோஷம் |

* 04.07.2015 சனி சிதம்பரேஸ்வரர் ஏழாம் ஆண்டு நிறைவு அபிஷேகம்

விசேஷ அறிவித்தல்: ஸ்ரீ சிவகாமசுந்தரி சுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் சந்நிதி தினமும் காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரையும், மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை சிவனடியார்களுக்காகத் திறந்திருக்கும்.

தினமும் மாலை 8மணிக்கு பூசை வழிபாடு நடைபெறும். மேலே குறிப்பிட்ட விசேட தினங்களில் அபிடேக ஆராதனை, கூட்டு வழிபாடு போன்றவை நடைபெறும். அன்பர்கள் அனைவரும் சந்நிதிக்கு வந்து வழிபாடுகளிலே கலந்து எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு சைவ முன்னேற்றச் சங்கம் அடியார்களை அன்புடன் வரவேற்கிறது.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# கலிக்கம்ப நாயனார்



நடுநாட்டின் மேற்கோடியில் "திருப்பெண்ணாகடம்" என்னும் வலிமை பொருந்திய ஓர் ஊர் உண்டு. அங்கு வணிகர் குலத்தில் கலிக்கம்பர் என்னும் பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு சிவபத்தர். திருத்தூங்கானைமாடம் என்ற திருக் கோயிலில் எழுந்தருளியுள்ள சிவக்கொழுந்துநாதர் திருவடிகளுக்குத் திருத்தொண்டு செய்பவர். சிவனடிப்பற்றைத் தவிர வேறு எந்தப் பற்றும் இல்லாதவர். கறிவகைகள், நெய், தயிர், பால், கனிவகைகள் முதலானவற்றைக் கொண்டு அடியார்களுக்குத் தினமும் திருவமுது செய்வித்து, அவர்களுக்கு வேண்டுவனவாகிய பிற நிதியங்கள் எல்லாவற்றையும் மகிழ்வுடன் கொடுப்பார். இவ்வாறு கலிக்கம்பர் திருத்தொண்டு செய்து வரும் நாள்களில் ஒருநாள் வழக்கம்போலத் தமது திருமனையில் அமுதுசெய்ய வந்த திருத்தொண்டர்களையெல்லாம் விதிமுறைப்படி திருவமுது செய்விக்கத் தொடங்குமுன் அவர்களின் திருவடிகளை விளக்கத் தொடங்கினார். அப்போது அவர் மனைவியார் அத்திருமனை முழவதும் விளக்கம் பெற விளக்கித் திருவமுதும், கறியமுதும், தூயதண்ணீரும் ஆகிய இவற்றுடனே உண்ணும் மற்றைப் பொருள்களையும் செம்மைபெற அமைத்துவிட்டு வந்து கரத்திலே நீர் வார்க்க, கணவனார் அடியார்களுடைய காலடிகளை எல்லாம் விளக்கிப் பாதபூசை செய்யலானார். இப்போது, முன்னாளில் தனக்கு பணிவிடைக் காரராய் இருந்து, ஏவற்பணியை வெறுத்துக் கோபித்துக்கொண்டு வெளியேறிய ஒருவர், சிவனடியார் வேடந்தாங்கி, அங்கு வந்த அடியார்களுடனே கூடி ஒருவர் பின்னால் வந்து சேர்ந்தார். கலிக்கம்பர் அவரது திருவடிகளையும் விளக்க தமது திருக்கரங்களால் பற்றினார். அப்போது அவரது காதல் மனைவியார் "இவர் நமது ஏவலைச் செய்யாது விட்டுச் சென்றவர் போலும்" என்று எண்ணும்போது கரகநீர், வார்க்கத் தாமதப்பட்டது. அதைக் கண்டதும் கலிக்கம்பர் தம் மனைவியரை ஏறிட்டுப் பார்த்து "இவள் இவ்வடியார் முன்பிருந்த நிலையைக் குறித்து வெட்கித் திருவடி விளக்க நீர் வார்க்காது தயங்குகிறாள் போலும்" என்று மனத்தில் நினைத்துக்கொண்டு தம் மனைவியாரை மீண்டும் பார்க்காமல், வாளை உருவியெடுத்து மனைவியாரின் கையிலிருந்த நீர்க்கரகத்தையும் வாங்கிக் கொண்டு, கரகநீர் வார்க்கத் தாமதித்த தம் மனைவியின் கையைத் துண்டாக வெட்டியெறிந்தார். பிறகு கரகத்தை எடுத்து அடியாரின் பாதங்களுக்குத் தாமே நீர் வார்த்து அவருடைய பாதங்களை விளக்கினார்.

பின்னர், அவ்வடியார் திருவமுது செய்வதற்கு வேண்டிய ஏனைய செயல்களையெல்லாம் கலிக்கம்பர் தாமே செய்து துலங்காத சிந்தனையுடன் அத்தொண்டருக்குத் திருவமுது செய்வித்தார். அதன் பின்னர் அளவற்ற பெருமை பெற்ற கலிக்கம்ப நாயனார், தமக்கேற்ற திருத்தொண்டின் வழியிலே வழுவாமல் நின்று சிவபெருமானுடைய திருவடிநிழலை அடைந்தார்.

முன்பு தம்மிடம் வேலைக்காரராக இருந்தவர் தாம் இப்போது சிவனடியாராக வேடம் தாங்கி வந்திருக்கிறாரோ என்ற நினைத்தும் அடியாரின் பாதபூசைக்குக் கரகநீர் வார்க்ககக் காலம் தாழ்த்திய மனைவியாரின் கையையே வெட்டியெறிந்த திருத்தொண்டரான கலிக்கம்பரின் திருவடிகளை வணங்குவோம்.

**"கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்**
**கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்"**

- சுந்தரர்.



# சிவயோகம்
## SIVAYOGAM

(Charity Reg No: 1050398 Since: 1995)

To facilitate here and beyond



## அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்
## Arulmihu London Muththumari Amman Temple

2A, Elmwood Road, Croydon, CR0 2SG

**Tel: 020 8767 9881, Fax: 020 8711 5333**

Email: sivashakthy@sivayogam.co.uk, Web: www. sivayogam.org

**திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்**

**Temple Opening Times**

**Tuesday**

08:30 AM to 09:00 PM

**Wednesday / Monday**

08.30 AM To 01.00 PM
04.30 PM To 09.00 PM

Temple will be closed between 01:00 pm to 04:30 pm everyday except Tuesdays.



**பூஜை நேரங்கள்**

**Pooja Times**

| | | |
|---|---|---|
| 09.00AM | : | காலைப்பூசை<br>Morning Pooja |
| 12.00NOON | : | பகற்பூசை<br>Afternoon Pooja |
| 07.30PM | : | இரவுப்பூசை<br>Evening Pooja |
| 09.00PM | : | அர்த்தசாமப்பூசை<br>Arthajaama Pooja |

அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் தற்காலிகமாக 2A, Elmwood Road, Croydon, CR0 2SG என்னும் முகவரியில் பூஜைகள் நடைபெற்று வருகிறது.

## அருள்மிகு இலண்டன் நடராஜர் திருக்கோயில்
## Arulmihu London Nadarajar Temple

3C, Ranelagh Road, Wembley, Middx, HA0 4TW

Tel: 020 8795 4258, Fax: 020 8711 5333

Email: sivashakthy@sivayogam.co.uk, Web: www.natarajartemple.org

**திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்**

**Temple Opening Times**

**08.00 A.M. to 09.00 P.M**



**பூஜை நேரங்கள்**

**Pooja Times**

| | | |
|---|---|---|
| 08.30AM | : | காலைப்பூசை<br>Morning Pooja |
| 12.00NOON | : | பகற்பூசை<br>Afternoon Pooja |
| 07.30PM | : | இரவுப்பூசை<br>Evening Pooja |
| 09.00PM | : | அர்த்தசாமப்பூசை<br>Arthajaama Pooja |

**Maragathalinga Abisheka Timings**

08:00 AM, 09:30 AM, 11:30 AM
04:00 PM, 05:30 PM, 07:00 PM


Veena's
CASH & CARRY
Quality! Variety!! Satisfaction!!!
BFC
Worldwide money transfer bureau de change
Halal Butchers
FRESH FRUITS & VEGETABLES
FROZEN FOODS
Veena's at BARKINGSIDE
020 8550 2700 • www.veenas.com



# சைவ முன்னேற்றச் சங்கத்தின் குரல்

திருமதி வாசுகி பத்மநாதன் என்றால் இனியகுரலும் கூட்டுவழிபாடுந்தான் பலரின் நினைவுக்கு வரும். சைவ முன்னேற்றச் சங்கத்தின் அனைத்து வழிபாடுகளிலும் இவரின் குரல் தவறாது கேட்கும். ஆரம்ப நாள்களிலிருந்து உடல்நலம் குன்றிய காலம்வரை இடைவிடாது வழிபாட்டிலே பாடியவர் இவர். இசையிலே தேர்ச்சி பெற்றவர் என்பதால் இனிமையாகப் பாடுவார். இறை ஈடுபாடு இருந்ததால் உள்ளன்போடு பாடுவார். இதனால், சங்கத்தின் வழிபாடுகள் அனைத்திலும் பத்திமயமான ஒரு சூழலை உருவாக்கும் தன்மை இவர் பாடலுக்கு இருந்தது. வழிபட வந்தோர் கூட்டு வழிபாட்டிலே ஒன்றி அவருடன் பாடிமகிழ்வர். வழிபாட்டிலே அவ்வப்போது பஞ்சபுராணமும் இவர் ஓதுவார்.

கொழும்பு சைவமுன்னேற்றச் சங்கத்தின் கிளையாக இங்கிலாந்திலே ஒரு சைவ முன்னேற்றச்சங்கம் 1977இல் உருவாகியது. கோயில்கள் இல்லாத காலத்தில், மக்களின் இல்லங்கள்தோறும் வழிபாடுகளை நடத்தியது இந்தச் சங்கம். சைவ சமயத்தைப் பற்றிச் சிறுவர்கள் தெரிந்துகொள்ளவும் வளர்ந்தவர்கள் வழிபாடுசெய்யவும் இந்த வழிபாடுகள் வழிவகுத்தன. இந்தச் சங்கம் ஆரம்பித்த நாள்களில் முன்னின்று செயற்பட்ட ஒருசிலருள் திரு பத்மநாதன் அவர்களும் ஒருவர். கணவருடன் மனைவி திருமதி வாசுகி அவர்களும் உறுப்பினராக இணைந்துகொண்டார். திரு பத்மநாதன் அவர்கள் உப தலைவராக, தலைவராக, செயற்குழு உறுப்பினராக பல பதவிகளில் இருந்து சங்கத்தின் வளர்ச்சிக்கு உழைத்தவர். தற்போது போஷகராக இருக்கிறார். அவரின் பொதுத் தொண்டுகளுக்குப் பக்கபலமாகப் பின்னின்று உழைத்தவர் திருமதி வாசுகி அவர்கள். விருந்தினரைப் பணிவுடன் வரவேற்பதிலும் இன்முகத்துடன் உபசரிப்பதிலும் அவருக்கு நிகர் அவரே.

இரு குழந்தைகளுக்குத் தாயான, ஆறு குழந்தைகளுக்குப் பாட்டியான திருமதி வாசுகி அவர்கள் இவ்வாண்டு, ஜய வருடம் பங்குனி மாதத் திங்கட்கிழமை, வளர்பிறைச் சதுர்த்தித் திதியிலே சிவபதம் அடைந்தார் என்ற செய்தி கிடைத்தது. எதிர்பாராத இந்த நிகழ்வால் நாம் அனைவரும் அதிர்ச்சியில் உறைந்தோம். அன்னாரின் குரல் இனி சைவ முன்னேற்றச் சங்கத்திலே ஒலிக்காது என்று உணரும்போது மனம் மிகக் கவல்கிறது. திருமதி வாசுகி அவர்களின் பிரிவாலே துயரில் மூழ்கியிருக்கும் அவரின் கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சுற்றத்தவர் அனைவருக்கும் சைவ முன்னேற்றச் சங்கத்தின் சார்பிலும் கலசத்தின் சார்பிலும் ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் ஆலயத்திலே பண்களை ஓதிய திருமதி வாசுகி அவர்களின் ஆன்மா குஞ்சித பதத்திலே என்றும் இருக்க நாம் சிதம்பரேஸ்வரரைப் பிரார்த்திப்போம்.

## மார்கழி திருவாதிரை அபிஷேகம்– 04.01.2015



## அன்னையர் தினம் – 2015



# Satash Community Care






**Orchid Bungalow**
**51 Mollands Lane, South Ockendon RM15 6DH**
**Adult Services 01708 850555**

**Jasmine Bungalow**
**53 Mollands Lane, South Ockendon RM15 6DH**
**Children Services 01708 851189**

**109-111 Mollands Lane, South Ockendon RM15 6DJ**
**Adult Services 01708 856592**

**Trinity Community Centre**
**East Avenue, London E12 6SG**
**Domicilary Care 0203 200 1047**

**www.satashcommunitycare.com**

**Letchmi Loganathan**
**07957 869620**
**letchmi@satashcommunitycare.com**

**Logan Loganathan**
**07956 377298**
**logan@satashcommunitycare.com**

**Sathian Loganathan**
**07949 755104**
**sathian@satashcommunitycare.com**


GOSHIN ISSHIN-RYU KARATE ASSOCIATION
LONDON - UK
SEISHINKAN
GOSHIN
ISSHINRYU KARATE
SENSEI M. RAMATHAS
TRAINED BY MICHAEL CALANDRA
THE FIRST AUTHORISED INSTRUCTOR IN THE UNITED KINGDOM OF
ISSHINRYU WORLD KARATE ASSOCIATION
OKINAWA - JAPAN
Michael Calandra
8th Dan, Kyoshi-Go
Isshin-Ryu Karate - Do
NEW YORK - USA
Tel: 001 917 667 0739
Email: oikddojo@aol.com
www.isshinryukarate.com
M Ramathas
4th Dan
Isshin-Ryu Karate - Do
LONDON - UK
0044 07958 010 139
Email: goshinissinryukarate@gmail.com
www.goshinisshinryukarate.com
Other Branches: Gants Hill, Ilford Lane, East Ham, Catford, Chadwell Heath, Sutton, Ley Street
Contact: Incharge & Instructor, Sensei M Ramathas Tel: 07958 010 139


your choice is CLEAR!
invisalign
Come to Bluebell for..
INVISIBLE TOOTH STRAIGHTENING
GUM DISEASE TREATMENT
COSMETIC DENTISTRY
SMILE MAKEOVERS
GENERAL DENTISTRY
ORAL SURGERY & IMPLANTS
ENDODONTICS
CHILDREN'S ORAL HEALTH
EMERGENCY APPOINTMENTS
FACIAL REJUVENATION
Book your FREE consultation today!
Bluebell is an Invisalign® Platinum Elite Provider.
If you have teeth that stick out, are crooked, have gaps or overlap then Invisalign is the best choice for you with clear, almost invisible braces.
Dr Suki Kanagasabai-Shakthi is one of the leading Invisalign® dentists in the UK. With her unique approach to an ethical and non-evasive path of treatment she has become an Invisalign® Platinum Elite Dentist, a title which is only held by a privileged few dentists in the UK.
Bluebell
dental practice & clinic
Making a Difference
CHIGWELL
020 8500 6789
STRATFORD
020 8555 1144
www.bluebelldp.co.uk
You Tube

# தென்னையும் விருந்தோம்பலும்

-வை.சி

தென்னை பற்றிய ஒரு கவிதை. தன்னுடையை தலையை விரித்து, மெலிந்து, தன்னந் தனியாக ஒற்றைத் தண்டாக, குலைகளையும் தாங்காமல் தாங்கி நிற்கிறது அந்தத் தென்னை. தேங்காய், இளநீர், ஓலையென எவ்வளவு பயனை அது தமிழ்நாட்டவர்களுக்குத் தருகிறது, அதுபோன்று பண்புள்ளவர்கள் தாங்கள் பசித்தாலும் இலைவிரித்துப் பசியென்று வந்தோர்க்கு உணவிடுவர். இந்தப் பண்பு தமிழர்க்கு மட்டுமேயுரிய பண்பாகும். தென்னையைப்போல் எல்லோர்க்கும் பயன்படுவோம் என்கிறது ஒரு கவிதை. அந்தக் கவிதை இதோ:



**தலைவிரித்தாய் உடலிளைத்தாய்**
**ஒற்றைக்கா லால்நின்றாய் - தமிழ்நாட்டார்க்குக்**
**குலைவிரித்துத் தேங்காயும் குளிரிளநீரும்**
**கூரைப் பொருளும் தந்தாய்**
**கலைவிரித்த நல்லார்கள் தாம் பசித்தும்**
**பிறர்பசியைத் தவிர்ப்பதற்கே**
**இலைவிரித்துச் சோறிடுவார் என்பதற்கோர்**
**எடுத்துக்காட் டானாய் தெங்கே!**

- புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

இன்னுமொரு கவிதை பார்ப்போம்:

**நான் உனது நண்பன்**



**ஊர்ஏரிக் கரைதனிலே என்னிளமைப் பருவத்திலே**
**இட்ட கொட்டை**
**நீரேதும் காப்பேதும் கேளாமல் நீண்டுயர்ந்து**
**பல்லாண் டின்பின்**
**வாராய்என் றெனைஓலை விசிறியினால் வரவேற்று**
**நுங்கும் சாறும்**
**சீராகத் தந்ததெனில் பனைபோலும் நட்புமுறை**
**தெரிந்தாருண்டோ?**

- புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

# TEMPLES IN SRI LANKA THAT WE VISITED

**- Veda**

*The author of this article, Mr C Vedanarayanan was blessed to visit all the Thirumurai Temples in India. He was eager to go to Sri Lanka to complete his pilgimage of ALL the Thirumurai Temples which include Thiruketheeswaram and Thirukoneswaram. He has just accomplished this fete with the grace of the Almighty.* *- Editor.*

Recently ( 2nd Mar to 8th March 2015 ) we had the good fortune to visit Sri Lanka and offer our prayers in the temples. It is the fulfilment of our long desire to have darshan of the Lords of Koneswaram and Ketheeswaram, the two Thirumurai sthalangal ( padal petra thalangal ) in Eezha nadu. It was even more pleasant considering that we did not plan to visit Sri Lanka but were rather drawn into making this trip, as my friend decided this sojourn for us and paid a hefty sum as advance without asking me. Inscrutable are the ways of the Almighty!!!

Sri Lanka is known for its Pancha Eswarams, the abodes of Lord Siva. These temples are located in all directions...Nakuleswaram (Keeri malai) in the North, Ketheeswaram and Munneswaram in the West, Koneswaram (Tirukonamalai) in the East and Thondeeswaram in the South. Also there are temples in towns and villages throughout the island. These Eswarams belong to hoary past, have legends but also have chequered history. These temples once patronised by kings and venerated for centuries were subject to destruction by foreign invaders, remained dilapidated for up to four centuries. The reconstruction was started about a hundred years ago and fortunately still continues.

We visited four of these five eswarams, leaving out Thondeeswaram (Thenavaram or Thevan thurai).

**MUNNESWARAM**

This place is near the fishing town of Chilaw ( Silabam ) in the region of Puttalam. Legend has it that Rama prayed here after his victory over Ravana. The current temple was built around 1000AD.



Munneswaram




Munneswaram chariot



Munneswaram kodimaram



Munneswaram entrance



Nakuleswaram (Keerimalai)



Nakuleswaram (Keerimalai)

**NAKULESWARAM (KEERIMALAI)**

This is located near Jaffna in northern Sri Lanka. This was also known as Thiruthambaleswaram. Nakula Muni did penance here and got rid of his mongoose face. Near the temple is a pure water spring with healing powers. This temple was destroyed by Portuguese in 1620 and was reconstructed only in 1894. This was destroyed by fire in 1918 and was rebuilt. This koil was occupied by Srilankan forces in 1983 and in 1990 was bombed. This was renovated and the kumbhabhishakam took place in 2012. It appears beautiful. I had a chat with the chief priest. He and I knew many people in London.

**KETHEESWARAM**

This place is about 5 km. from Mannar, west Sri Lanka. Originally this area was known as Ma(n)thottam or Manthai.The theertham is PALAVI. This tank has been restored after years of disuse. Ravanan's wife Mandodhari was from here. The origin of this temple dates back to 600BC. Bhrugu and Kethu worshipped in this temple. Legend tells that Vayu uprooted three towers from the clutches of Adhiseshan and deposited one here..

Sambandar sang VIRUDHU KUNRA MAMERUVIL NAAN ARA..(2nd tirumurai, Nattaragam)

Sundarar composed NATHTHAAR PUDAI GNANAN PASU ( 7th tirumurai, Nattapadai)


Palaavi theertham


Palaavi theertham


Ketheeswaram temple


Ketheeswaram(Swami,Devi)


Abhishekam to Mahalingam


Swami and Amman vimanam

**KONESWARAM ( TIRUKONAMALAI )**

This is known as Dakshina Kailasam. This temple is on a short hillock, at the tip of an isthmus… surrounded by sea on three sides. Again the origin dates back to 6th century BC. Originally the temple boasted of a very tall gopuram and 1000 pillared mandapam. This koil was destroyed by Portuguese and resurrection took place in 1980s. People from other religions also worship here. Recently (Feb 2015) kumbhabhishekam took place and mandalabhisheka poojas are held now. We were fortunate to witness the pooja.

Sambandar's composition NIRAI KAZHAL ARAVAM SILAMBOLI (3rd tirumurai..Puraneermai)
Arunagiri's Tirupukazh VILAIKKU MENIYIL ANIKKOVAI MEKALAI


Koneswaram


Koneswaram


Koneswaram


People from other religion


Lord Koneswarar


'Ravanan Vettu'

# கல்வியின் பயன்

-தவம்-

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்

-திருக்குறள்

***Learning is of no use***
***if the learner does not submit himself to God***



கல்வி கற்பதன் நோக்கம் எதுவாக இருக்கவேண்டும் என்று திருவள்ளுவர் இத் திருக்குறள் மூலம் அழகாக எடுத்துரைக்கிறார். படிப்பதன் நோக்கம் அறிவைப் பெறுதல். அந்த அறிவு, எமது அறிவுக்கும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட ஒரு பேரருட்சத்தி உள்ளது என்பதை உணர்ந்து அதைப் போற்றத் தூண்டாவிட்டால், அந்தக் கல்வி அறிவால் எமக்கு என்ன பயன் உண்டாகப்போகிறது? என்பதே இக்குறளின் கருத்தாகும். ஒரு பயனும் இல்லை என்பதே உண்மை.

காஞ்சிப் பெரியவரும் இக்குறளின் கருத்தை வலியுறுத்தி "தெய்வத்தின் குரல்" என்னும் புத்தகத்தில் சரஸ்வதி என்ற அதிகாரத்தில் பின்வருமாறு கூறுகிறார்:

"இப்போது இருக்கிற படிப்பு முறையைப் பார்த்தால் வித்தை (கல்வி) வேறு, ஞானம் வேறு என்றே தோன்றுகிறது. வித்தைதான் ஞானம் என்ற பழைய முறை போய்விட்டது. முன்பெல்லாம் அகங்காரம் அடிபட்டுப்போய் பரமாத்மாவுடன் சேருகிற ஞானத்தைத் தரவே சகல வித்தைகளும் ஏற்பட்டிருந்தன. இன்றைய கல்விமுறை வாழ்க்கையை வளப்படுத்த, வசதிகளைக் கூட்ட உதவுகிறதே தவிர மெய்ஞ்ஞானத்தை வளர்க்க உதவவில்லை" என்பதே பெரியவரின் கருத்தாகும். அதனாற் பரமேஸ்வரனைப் பாதபூசை பண்ணவைக்காத ஒரு படிப்பினால் என்ன பயன் என்று திருவள்ளுவரின் மேற்கூறப்பட்ட குறளையே பெரியவர் மேற்கோள் காட்டுகிறார்.

இன்றைய காலகட்டத்திலே கணினி மக்கள் வாழ்க்கையில் முக்கி இடத்தைப் பிடித்துள்ளது. அதன் செயற்பாட்டைக்கண்டு அனைவரும் வியந்து பேசிக்கொள்கின்றனர். ஆனால் அநுபவித்து மகிழ இயற்கை வளங்கள் அழகான இயற்கைக் காட்சிகள் அனைத்தையும் இறைவன் படைத்திருக்கிறான் இந்த இறைசத்தியின் பெருமையை மனிதன் உணரத் தவறிவிடுகிறான். இயற்கையாகப் படைக்கப்பட்டவற்றில் இருந்தே மனிதன் தனது திறமையால் செயற்கையாகப் பலவற்றைக் கண்டுபிடிக்கிறான். விஞ்ஞான வளர்ச்சி, தொழில் நுட்ப வளர்ச்சி யாவும் இதனால் ஏற்பட்டவைதாம். இவற்றை வைத்து மனிதனால் எதனையும் சாதிக்கமுடியும் என்ற உணர்வை மக்கள் பெற்றுள்ளார்கள். இதனால் மக்கள் படிப்பு பட்டம் பதவி பணம் இவற்றால் ஏற்படக்கூடிய வாழ்க்கை வசதிகள் என்பவற்றையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்கிறார்கள். இதற்காகக் கடினமாக உழைக்கிறார்கள். சிலர் தாம் நினைத்தவை கிடைக்காமல் வருந்துகிறார்கள். பலர்

எல்லாங் கிடைத்தும் திருப்தியின்றி வருந்துகிறார்கள். ஏனெனில் மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தி யொன்று உலகை இயக்கி வழிநடத்துவதை மனிதன் உணரத் தவறியதேயாகும்.



அன்றாட வாழிவிலும் உலகளாவிய நிலையிலும் எத்தனை விபத்துக்கள், புதுப்புது நோய்நொடிகள், பூகம்பம், வெள்ளப்பெருக்கு, சூறாவளி, வரட்சி, எரிமலை, பனிப்பொழிவு என எத்தனை இயற்கை நிகழ்வுகள்; அழிவுகள்? இத்தகைய இயற்கை நிகழ்வுகளை மனிதனாலே தடுக்க முடிந்ததா? முடியுமா? இவற்றை உற்று நோக்கிச் சிந்தித்தால்மட்டுமே வாழ்வியற் தத்துவத்தைதயும் அதனூடாக இறைசத்தியையும் உணரலாம்.

**"அவனன்றி ஓரணுவும் அசையாது"**

# பண ஸ்பரிசம்

## (காஞ்சிப் பெரியவர் அருள்வாக்கு)

பொதுவாகப் பணத்தின் 'டச்' (ஸ்பரிசம்) வந்துவிட்டால் அதோடு ஒரு காரியத்தில் அநேகக் கெடுதல்களும் வந்துவிடும். பொதுத்தொண்டு செய்யப் புறப்படுகிறவர்கள் பணவிஷயத்தில் ரொம்பவும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். நல்ல ஆதரவு திரவிய ஸஹாயமாகவும் நம் கார்யத்துக்குக் கிடைத்தாற்கூட அதனால் Over - enthusiastic ஆகி (அதீத உத்ஸாகம் அடைந்து) இப்போது இந்தியா கவர்மென்ட் செய்கிறமாதிரி ambitious planning (அதி ஆசைத்திட்டம்) போட்டு நிறையப் பணம் 'கலெக்ட்' பண்ண ஆரம்பிக்கக்கூடாது. இப்படி ஆரம்பித்தால் அதற்கு ஒரு முடிவே இருக்காது. இதனாலே பரோபகாரம் என்ற அன்பு எண்ணத்தையும், அதில் அங்கமாகச் செய்கிற தேவாலய கைங்கர்யங்களின் பக்தி எண்ணத்தைய!ங்கூட 'வசூல்' எண்ணம் முழுங்கிவிடும். எப்போது பார்த்தாலும் ரசீது புத்தகமுங் கையுமாக அலைவதும் 'பேப்பர் காரர்களைப் பிடித்து அப்பீல் பண்ணலாமா, அட்வர்டைஸ்மென்ட் பிடித்து ஸோவனீர் போடலாமா?' என்பதே சிந்தையாகத் தவித்துக்கொண்டிருக்கும்படியும் ஆகும். நிறையப் பணம் சேர்ந்து அதைக் கையாளவேண்டியிருக்கும்போது நாமே எப்படி மாறிப்போய்விடுவோமோ என்ற பயம் ஸதாவும் இருக்கணும்.

அதுவுமில்லாமல், ரொம்பவும் பணம் சேர்ந்தால் ஊரில் இருப்பவர்களுக்கும் அது சரியாகப் பிரயோஜனமாகிறதா என்ற சந்தேகம் எழும்பும். இதோடுகூட, சற்றுமுன் சொன்னமாதிரி, இஷ்டமில்லாதவனையும் நிர்ப்பந்தப்படுத்தி வாங்குவதும், இப்படி வாங்கிவிட்டதால் அப்புறம் அவனிடம் பவ்யப்பட்டு நிற்பதும் நம் பணியையே அசுத்தம் செய்துவிடும். அதனால் எந்த நல்ல காரியமானாலும் 'அதி'யாக அதைக் கொண்டுபோய் விடாமல், அவசியத்தோடு நிறுத்திக்கொண்டு, செட்டும் கட்டும் சிக்கனமுமாகவே அதற்கான வரவு செலவுகளை நிர்வகிக்கவேண்டும்.

**நன்றி: கல்கி, தகவல்: லண்டன் சபரி**

# பொய்யாத விநாயகர் மூர்த்தி – மலாக்கா

டாக்டர் க சிவகுமார்

மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் இருக்கும் சைவ ஆலயங்களுள் முதன்முதல் ஆரம்பிக்கப்பட்டு பொய்யாத விநாயகர் மூர்த்தி கோயில். 230 ஆண்டுகளுக்கு மேலாக மலேசியாவின் தென்மேற்குக் கரையிலுள்ள மலாக்காவில் பொய்யாத விநாயகர் அருளாட்சி செய்துவருகிறார். மலேசிய நாடு தோன்றியதே மலாக்காவிலேதான். 'சிட்டிகள்' என்ற சமூகத்தினரின் பாரம்பரியப் பொக்கிஷம் பொய்யாத விநாயகர் மூர்த்தி கோயில்.

1781ஆம் ஆண்டில் தெய்வநாயகம் என்ற சிட்டி சமூகப்பெரியார் டச்சு அரசால் வழங்கப்பட்ட காணியில் மலேசிய நாட்டின் முதலாவது சைவ ஆலயத்தை நிறுவினார். கோயிலைச் சுற்றி நன்கொடையாக வழங்கப்பட்ட காணிகளில் பல சிட்டிக் குடும்பங்கள் குடியேறின. காலப்போக்கில் இன்னும் பல ஆலயங்கள், குறிப்பாக, கயிலாசநாதர், மகாமாரி, அங்காளம்மன், பரமேஸ்வரி கோயில்கள் நிறுவப்பட்டன. முதலில் புலம்பெயர்ந்த மூத்த மகன் பெற்றோரை வரவழைத்த கதைதான். ஆலயங்கள் இருக்கும் கஜாபெராங் (Gajah Perang) பகுதி தம்முடைய மூதாதையரின் ஊரான காஞ்சிபுரத்தைக் குறிக்கின்றது என்று சிட்டிகள் பெருமைப்படுகின்றனர்.

பொய்யாத விநாயகர் மூர்த்தி கோயில் பரந்த முகப்புடையது. கோபுரம் உயர்ந்ததல்ல. திராவிட முறையில் அமைக்கப்பெற்ற சைவக் கோயில்களில் பல்லடுக்குக் கோபுரம் இருக்கும். இங்கு மூன்று தளங்கள்தான். நமது பாரம்பரியக் கோயில் கோபுரங்களில் இறைவனுடைய திருவிளையாடல்களைச் சித்திரிக்கும் ஏராளமான சிற்பங்கள் காணப்படும். இங்கு ஒவ்வொரு தளத்திலும் ஒரேயொரு திருவுருவம். கோயிலின் வாசலில் ஒரு பக்கத்தில் ஆலயத்தின் ஆரம்பத்தையும் உரிமையையும் பறைசாற்றும் அறிவித்தல் பலகை. தமிழுக்கு இதில் முதலிடம். அதன் கீழ் மலாய் மொழி. அதற்கும் கீழ் ஆங்கிலம்.

உள்ளே நுழைந்ததும் மூலஸ்தானம் தெரிகிறது. அங்கு வெகு நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்ட ஐங்கரனின் திருவுருவம். வெள்ளித் திருவாசி வெகுதூரம் பளிச்செனத் தெரிகிறது. நெற்றியில் திருநீற்றுப் பட்டை. அதன் நடுவில் சிந்தூர திலகம். அதன் கீழ் சந்தனம். அகன்ற இரு விழிகள், ஒரு பக்கம் நீண்ட தந்தம், மறுபுறம் எஞ்சிய எயிறு. இவை நாற்கோணத்தில் அமைந்து நம் மனதைச் சற்று உலுப்பி, 'கார்நிற மேனிக் கற்பகக் களிற்றின்'பால் ஈர்க்கின்றன. மாணிக்க ஆரமும், மார்பில் நிறைவான



பதக்கமும், சந்தன நிறப் பீதாம்பரமும் அகன்ற தோள்களை அலங்கரிக்கும் சால்வையை மேலும் அழகு செய்யும் மலர் மாலைகளும் பொய்யாத விநாயகரின் பொலிவான தோற்றத்துக்கு மெருகூட்டுகின்றன. இரு மருங்கிலும் தூண்டா மணிவிளக்குக்கள். தூயவனின் தோற்றத்தை அவை துலங்கச்

செய்கின்றன. சுற்றுப் பிரகாரத்தில் சிவலிங்கம், முருகப்பெருமான், மதுரை மீனாட்சி ஆகிய தெய்வங்களுக்கான விசேட சந்நிதிகள் ஆலயத்தின் சிறப்புக்கு மேலும் அழகு சேர்க்கின்றன. தமிழைச் சரிவரப் பேசத் தெரியாத சிவாசாரியார் பயபத்தியுடன் அர்ச்சனை செய்துகொடுக்கிறார். அது எந்த மொழியென்று சரியாகப் புரியவில்லை. கோயில் நிருவாகத்தை பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டுக்கோட்டைச் செட்டியார்களுக்குப் பொறுப்புக் கொடுத்திருக் கிறார்கள். இருந்தாலும் சிட்டிகள் இவ்வாலயம் தம் முன்னோர் தமக்களித்த அருஞ்செல்வம் என்பதை நிலைநாட்டத் தவறுவதில்லை.

## மலாக்காவின் தோற்றம்:

1396ஆம் ஆண்டளவில் பரமேஸ்வரா எனும் சைவ அரசனால் மலாக்கா தாபிக்கப்பட்டது. அவர் இந்தியாவின் கேரளப் பகுதியிலிருந்து கடல்வழி சென்று சுமாத்திராவில் ஆட்சி செய்து பின் புதுநிலம் தேடிப் புறப்பட்டார். அவர் வந்து இறங்கி ஒரு மரத்தடியில் இளைப்பாறிக் கொண்டு இருந்தபொழுது வேட்டை நாய்களுள் ஒன்றை, சின்னஞ்சிறு மான்போன்ற ஓர் எலி தனது பின்கால்களால் எட்டி உதைத்ததைப் பார்த்து வியந்த அவர் அந்நிலத்துக்கு நிழல்கொடுத்த மரத்தின் பெயரான மலாக்கா என்ற நாமத்தைச் சூட்டினார். பரமேஸ்வரா 1414ஆம் ஆண்டில் இஸ்லாமிய இளவரசி ஒருத்தியை மணஞ்செய்து தானும் மதம் மாறி, தன் பெயரையும் இஷ்கின்டர் ஷா என மாற்றிக்கொண்டார். மேற்கில் பாரதத்தையும் யவனநாடுகளையும் கிழக்கில் சீனாவையும் கொண்ட ஒரு கேந்திர ஸ்தானமாக மலாக்கா வணிகத்தில் விரைவில் வளர்ந்தது. பத்மநாதபுர அரண்மனை, பலவிதங்களில், முக்கியமாக மரவேலைப்பாட்டிலும் கூரை அமைப்பிலும் மலாக்கா சுல்தான் வாழ்ந்த அரண்மனையை ஒத்திருப்பதை இன்றும் காணலாம். போர்த்துக்கேயருக்குப்பின், டச்சுக்காரரும் தொடர்ந்த ஆங்கிலேயரும் ஆட்சி செய்தபின் 1957ஆம் ஆண்டு மலாயா சுதந்திரம் பெற்றது. தலைவர் துங்கு அப்துல் ரஹ்மான் அவர்கள் இங்கிலாந்து சென்று நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின் நாடு திரும்பியபோது சுதந்திரம் பற்றி முதலில் அறிவித்தது மலாக்காவிலேதான்.

## சிட்டிகளா? செட்டிகளா?

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்றனர் முன்னோர்கள். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் நாட்டுக்கும் மலேயாக் குட-நாட்டுக்கும் வர்த்தக, கலாசாரத் தொடர்புகள் இருந்திருக்கின்றன. அந்த வகையில் 15ஆம் நூற்றாண்டில் சோழமண்டலத்திலிருந்து (Coromondel) வந்த வணிகர் காலப்போக்கில் மலாய சீனப் பெண்களை மணமுடித்து மலாக்காவைத் தம்முடைய நிரந்தர வதிவிடம் ஆக்கிக்கொண்டனர். அக் காலகட்டத்தில் சுல்தான் ஆட்சி விழுந்து போர்த்துக்கேயரின் ஆதிக்கம் ஆரம்பமாகியது. அந்நியர் ஆதிக்கம் வலுவடைந்த நாள்களில் செட்டியார் என்ற சொல் 'செட்டி' என்று சுருங்கி, பின் 'சிட்டி' என்று மருவியதாக ஒரு கருத்துண்டு. ஆனால், செட்டிகள் அடகு பிடித்துக் கடன் கொடுப்போர் என்றும், பல்லாண்டுகளுக்கு முன் வந்து



இறங்கிய வணிக் குலத்தின் வழித்தோன்றல்கள் தாமே என்றும் 'சிட்டி'கள் என்ற சமூகத்தினர் இன்றும் தம்முடைய தனித்துவத்தை நிலை நாட்டுகின்றனர். 15ஆம் நூற்றாண்டில் வணிகர்களாக மலாக்கா வந்திறங்கிய அவர்கள் மலாய சீனப் பெண்களை மணஞ்செய்து அவ்வூர்ச் சம்பிரதாயங்கதை தழுவிக் கொண்டாலும் சமயத்தைப் பொறுத்தமட்டில் சைவத்தைக் கைவிடவேயில்லை. டச்சுக்கா ரர்களின் ஆதிக்கமும் பெருக சிட்டிகளின் தாய்நாட்டுத் தொடர்பு படிப்படியாகக் குறைந்தது. தம்முடைய மொழியும் மலாய் மொழிதான் என்று ஏற்றுக்கொண்டனர். ஆனால், தம் மதம் சைவசமயமே என்ற கருத்து எள்ளளவும் குறையவில்லை.

புலம் பெயர்ந்து வந்திருக்கும் நாம் கவனிக்வேண்டிய விடயங்கள் இதிலே பல உண்டு. புகுந்த நாட்டின் பழக்க வழக்கங்களைப் புலம் பெயர்ந்தோர் கைக்கொண்டாலும் அவர் சந்ததியினர் கலப்புத் திருமணங்கள் செய்தாலும் தமிழையும் தாய் நாட்டையும் மறவாதிருக்க வழி செய்யவேண்டும். தாய் மண்ணுடன் உள்ள தொடர்பு அற்றுப்போகாதிருத்தல் அவசியம். எண்ணற்ற கோயில்களை எழுப்பி, சைவப் பற்றுக் குறையாதிருக்க வழிவகை செய்தாலும் மொரிஷியஸ், பிஜி, மலாக்கா போன்ற நாடு களில் ஏற்பட்ட நிலைமை புலம்பெயர்ந்த நம் இனத்திடையேயும் உருவாகுமோ என்ற ஏக்கம் ஏற்படத்தான் செய்கிறது. இங்குள்ள ஆலயங்களிலே தமிழும் எம்முடைய பாரம்பரிய கலைகளும் கற்பிக்கப்படுவது மெச்சத்தக்கது. சைவ சமயப்பற்றை பேணிக் காக்க முயற்சிக்ள



எடுக்கும்போது தாய் மண்ணில் இருக்கும் பஞ்ச ஈஸ்வரங்கள் போன்ற முக்கிய தலங்களைப் பற்றிய அறிவையும் தவறாது இளைய தலைமுறைக்கு ஊட்டவேண்டும்.

கச்சயப்பமுனிவர் அருளி விநாயகர் இட்டகத்திலிருந்து இரு பொன்னான வரிகள்:
'பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்'

***

Enlightenment Circle

எல்லா வயதினருக்கும் யோகாசன வகுப்புக்கள் இங்கே நடைபெறுகின்றன.

Yoga lessons are held here for all age groups

Contact our team on : 07830 374780 / 07730 313379.



# கண்ணனும் தாத்தாவும்



- முத்து -

நம் நாட்டைப்போலவே இப்போது இலண்டனிலும் கோடைகாலம் ஆரம்பித்ததுமே ஒவ்வொரு கோயிலாகக் கொடியேறி திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பெரியவர்களும் சிறியவர்களும் மகிழ்ச்சியாகக் கோயிற் திருவிழாக்களில் கலந்து கொள்கிறார்கள். இந்து சமயமும், தமிழும், கலைகளும் கூட இந்நாட்டில் தொடர்ந்து நிற்கும் என்ற நம்பிக்கையை தருகிறது. இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில் தேரும், என்பீல்ட் நாகபூஷணி அம்மன் தேரும் ஒரே நாளில் நடைபெற்றதால் கண்ணனும் தாத்தாவும் இரண்டு கோயில் தேர்த்திருவிழாக்களையும் பார்த்துக் கடவுளைத் தரிசித்து வீடு திரும்பினர்.

**கண்ணன்:** கொஞ்சம் களைப்பாய் இருந்தாலும் மகிழ்ச்சியாக இருக்கு. இல்லையா தாத்தா?

**தாத்தா:** ஆமாம் கண்ணா! மகிழ்ச்சியாகவும் மனம் நிறைவாகவும் இருக்கிறது. கண்ணா!

**கண்ணன்:** சுவாமி தேரில்வரும் கண் கொள்ளாக் காட்சியைக் கண்டதாலோ! நாதஸ்வரம் பஜனை எல்லாம் கேட்டதாலோ!

**தாத்தா:** சிலவேளை எங்களுக்குத் தெரியாமலேயே நிறைய விடயங்கள் எங்கள் மனதிற்குச் சந்தோஷத்தைத் தருகிறது. சுவாமியை அருச்சிக்கும் மந்திரங்கள், தீபாராதனைகள், பஜனை, இசை போன்றவை, இவை மட்டுமின்றி நாங்கள் அடிக்கடி சந்திக்காத நண்பர்கள், உறவினர்களைச் சந்திப்பது எல்லாமே சேர்ந்து எங்களுக்குச் சந்தோஷத்தை அளிக்கிறது.

**கண்ணன்:** ஆமாம் தாத்தா! நீங்கள் சொல்வது சரிதான். கோயிலில் நடைபெறும் எல்லா நிகழ்வுகளும் பத்தர்களும் அரோகரா என்று கோஷமிடுவதும் எங்கள் மனதிற் பத்தியை வரச்செய்கிறது. உறவினர்களையும் நண்பர்களையும் காண்பதும் சந்தோஷமே.

**தாத்தா:** நாகபூஷணி அம்மன் கோயிலில் காவடியாட்டம் எப்படியிருந்தது கண்ணா?

**கண்ணன்:** ஓ...! ஆது நன்றாகவே இருந்தது தாத்தா! எனக்கும் ஒரு காவடி எடுத்து ஆடவேண்டும்போல ஆசையாக ஆசையாக இருந்தது. பெண்கள் பாற்குடங்களைத் தலையிற் சுமந்து வீதிவலம் வந்ததும், கர்ப்பூரச்சட்டி ஏந்தி

வந்ததும் கூடக் கண்கொள்ளாக் காட்சிதான் தாத்தா! எதற்காகச் சிலர் இப்படிக் கடவுளை வணங்குகிறார்கள் என்பதுதான் எனக்கு விளங்கவில்லை.

**தாத்தா:** சிலபேர் கடவுள் மீது கொண்ட பத்தியினாற் செய்வார்கள். சிலர் மனதில் ஏதாவது வேண்டுதல்களை(நேர்த்தி) வைத்துச் செய்வார்கள்.

**கண்ணன்:** வேண்டுதல் என்றால் என்ன தாத்தா?

**தாத்தா:** கடவுளிடம் எங்களுக்குத் தரும்படி ஏதாவது ஒன்றைக் கேட்டு நின்று பிரார்த்திப்பது கண்ணா! பிள்ளைகள் இல்லாதவர்கள் தங்களுக்கு குழந்தை ஒன்று தரும்படி வேண்டுவர். சிலர் தங்களுக்குத் திருமணம் நடக்கவேண்டும் என்று வேண்டுவர். சிலர் பரீட்சையில் தேறவும், சிலர் தொழில் கிடைக்க வேண்டும் என்றும், நோயாளிகள் நோய் மாறவேண்டும் என்றும் பலவிதமாக வேண்டுதல்கள் செய்வார்கள்.

**கண்ணன்:** அப்படிக் கேட்பதெல்லாம் கிடைக்குமா தாத்தா?

**தாத்தா:** ஆமாம் கண்ணா! முழு நம்பிக்கையுடன் பிரார்த்தித்தால் எதுவும் கிடைக்கும் கண்ணா! எத்தனையோ பேர் கேட்டதைப்பெற்று மகிழ்ந்ததை நான் பார்த்திருக்கிறேன். கடவுள் எல்லாம் அறிந்தவர். கேட்பவர்களுக்கு அது நல்லதல்ல என்றாற் கொடுக்கமாட்டார்.

**கண்ணன்:** "நம்பிக் கெட்டவர் எவர் ஐயா" என்றொரு பாடல் கேட்டிருக்கிறேன். அது உண்மைதான். என்ன தாத்தா?

**தாத்தா:** ஆமாம் கண்ணா! "நம்பினோர் கெடுவதில்லை. அது நான்கு மறைத்தீர்ப்பு" என்றொரு பாடலும் உள்ளது. இப்படி நிறையவே பாடல்கள் உள்ளன. அவற்றைக் கேட்பதாலும் பாடுவதாலும் பத்தியும் கடவுள் நம்பிக்கையும் கூடும் கண்ணா!

**கண்ணன்:** தாத்தா! நாங்கள் அண்மையிற் தமிழ்த் தொலைக்காட்சியில் பார்த்த "மகான்களும் அதிசயங்களும்" என்ற காஞ்சிப் பெரியவரின் வரலாற்றை கூறும் நிகழ்ச்சியில் எத்தனை அற்புதங்களைப் பார்த்திருக்கிறோம். அவர் தம்மை நம்பி வந்த எல்லோருடைய வேண்டுதல்களையும் நிறைவேற்றி மகிழ்விக்கின்றார். சிலர் கேளாமல் இருந்தபோது அவர்கள் மனதில் இருப்பதை அறிந்து அவர்களுக்குத் தேவையானவற்றைக் கொடுக்கிறார்.

**தாத்தா:** ஆமாம் கண்ணா1 உண்மைதான். காஞ்சிப்பெரியவர் தம் வாழ்வில் எத்தனையே அற்புதங்களை மக்களுக்காக செய்திருப்பதை நங்கள் பார்த்திக்கிறோம்.

**கண்ணன்:** ஒவ்வொரு நிகழ்ச்சியும் எங்களை மிகவும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி விடுகின்றது. அவரது அருட்சக்தியை அறிய வைக்கிறது.

**தாத்தா:** பெரியவர் போன்ற மகான்கள் எல்லாம் மக்களுக்கு சேவை செய்வதற்காகவே உலகில் தோன்றுகின்றனர் அன்னை காமாட்சி தன்னை உலகிற்கு அனுப்பி வைத்திருப்பதாக பெரியவரே ஒரு இடத்தில் கூறுகிறார் கண்ணா!. தம் அடியார்களுக்குத் துன்பம் நேர இருந்தால் அதனைத் தம் ஞானசக்தியினால் உணர்ந்து அவர்களுக்குத் துன்பம் வராது காத்துவிடுகிறார். கடவுளின் பேரருட்சக்தியை இவர்கள் மூலம்தான் மக்கள் தெரிந்து கொள்கிறார்கள்.

**கண்ணன்:** இவரைப் போன்ற பெரியவர்கள் அடிக்கடி இந்த உலகிற் பிறக்க வேண்டும் தாத்தா!

**தாத்தா:** ஆமாம் கண்ணா! கடவுளை அடைய வழிகாட்டியாக இருப்பவர்கள் இவர்கள்தான்.

**கண்ணன்:** எந்த விதமான படிப்பைப் படிக்கவும் பட்டங்கள் பெறவும் ஆசிரியர்கள் வழிகாட்டியாக இருப்பதைப்போலக் கடவுளை அடைய காஞ்சிப் பெரியவர்கள் போன்ற மகான்கள் அவசியம் என்கிறீர்கள்! அப்படித்தானே தாத்தா?

**தாத்தா:** அதேதான் கண்ணா! மிகவும் சரியாகப் பரிந்து கொண்டாய். கெட்டிக்காரன். சபாஷ். (தாத்தா கைதட்டுகிறார்)

**கண்ணன்:** நன்றி தாத்தா. இந்தப் பாராட்டு உங்களுக்குத்தான் சேரும்.

**பாட்டி:** என்ன! தாத்தாவும் பேரனும் ஒருவரை ஒருவர் பாராட்டிக் கொள்கிறீர்கள். இந்தக் குளிர்ந்த பழரசத்தை குடித்துவிட்டுத் தொடருங்கள்.

**கண்ணன்:** நன்றி! பாட்டி! சரியான நேரத்தில் கொண்டு வந்தீர்கள். நானும் தாத்தாவும் இதற்காகவே காத்திருந்தோம். எங்களுக்கு எது தேவையென்று உங்களைத்தவிர வேறு யாருக்குத் ரெியும்.

**பாட்டி:** சரி, சரி நீயும் தாத்தாவுடன் சேர்ந்து கொண்டு நல்லாய்ப் பேசப் பழகிவிட்டாய் கண்ணா! கேட்கச் சந்தோஷமாக இருக்கு. எனக்குச் சமையலறையில் வேலையிருக்கு, நான் போகிறேன்.

**கண்ணன்:** சரி பாட்டி!

**தாத்தா:** கண்ணா! சில நேரம் கடவுளே மனிதராக வந்து உலகில் பிறப்பதாகச் சொல்கிறார்கள். மகாவிஷ்ணுவே மகாபாரதத்தில் கிருஷ்ணராகவும் இராமாயணத்தில் இராமராகவும் பிறந்து அதர்மத்தை அழித்து தர்மத்தைக் காக்கிறார்.

**கண்ணன்:** அதனால்தான் இந்த இரண்டு இதிகாசங்களும் மிகவும் பெருமை வாய்ந்ததாக விளங்குகிறதோ?

**தாத்தா:** அதுவும் ஒரு காரணம் தான். அத்துடன் சிறியவர் முதல் பெரியவர்

வரை அறியவேண்டிய நல்ல விஷயங்கள் உள்ளன.

**கண்ணன்:** ஆமாம் தாத்தா! நல்ல சகோதரர்களுக்கு எடுத்துக் காட்டாகப் பாண்டவர்கள், அதர்மத்தின் வழி நின்றவர்களாகத் துரியோதனனும் தம்பிமாரும்.

**தாத்தா:** எந்த நிலையிலும் தர்மத்தின் வழி நிற்கும் இராமர், தர்மர். பெற்றோர்களிடத்தும் குருவிடமும் எப்படி நடக்க வேண்டும் என்று இரண்டு இதிகாசங்களும் காட்டுகின்றன.

**கண்ணன்:** பாரதப்போரில் அருச்சுனனுக்குக் கிருஷ்ணர் உபதேசிக்கும் பகவத்கீதை தாத்தா!

**தாத்தா:** கெட்டிக்காரன்! அது இப்போது உலகப் பிரசித்தி பெற்றதாகி விட்டது. உலகமக்கள் அனைவருமே படித்துப் பயனடையக் கூடியது.

**கண்ணன்:** தமிழில் எவ்வளவோ புத்தகங்கள் இருக்கின்றனவே! இவ்வளவையும் எப்படிப் படித்து முடிக்கலாம் தாத்தா?

**தாத்தா:** படித்து முடிக்கவே முடியாது கண்ணா? அதனால், சில நல்ல புத்தகங்களைத் தெரிவுசெய்து படித்து முடிக்கலாம். ஔவையார் எழுதிய நல்வழி என்னும் பாடற் பகுதியிற் சில முக்கியமான புத்தகங்களைப் பற்றி கூறுகிறார்.

**கண்ணன்:** அதை எனக்குச் சொல்லித் தாருங்கள். எனக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் பயன்படும்.

**தாத்தா:** சரி கண்ணா! சொல்கிறேன் கேள்!

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்." (நல்வழி)

**கண்ணன்:** எனக்கும் கொஞ்சம் விளங்குகிறது. திருக்குறள், தேவார, திருவாசகங்களை பற்றிச் சொல்லப்படுகிறது. நீங்கள் முழுக்கருத்தையும் சொல்லுங்கோ.

**தாத்தா:** நல்லது. சுருக்கமாக சொல்லுகிறேன். திருக்குறள், தேவாரங்கள், திருவாசகம், திருக்கோவையார், திருமூலர் திருமந்திரம், வேதங்களின் சாரமான உபநிடதங்கள் முதலியன எல்லாம் ஒரு பொருளையே கூறுகின்றன. இவை போன்ற எல்லா நூல்களும் பரம்பொருளாகிய இறைவனையே கூறுகின்றன.

**கண்ணன்:** அப்போ இவற்றில் தேவார திருவாசகங்களைப் படித்தாலே போதுமானது இல்லையா? தாத்தா?

**தாத்தா:** ஆமாம் கண்ணான்! திருக்குறளையும் சேர்த்துக் கொள்ளலாம். அதில் உலக வாழ்க்கைக்குத் தேவையான விடயங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. சரியடா கண்ணா! மாலை 6.00மணியாகிறது. இப்போ நான் சுவாமி கும்பிடப் போகிறேன்.

**கண்ணன்:** சரி தாத்தா!. நானும் கொஞ்ச நேரத்தில் உங்களுடன் சேர்ந்து கொள்கிறேன்.

# Hinduism in search of answers...


Prof. Kamil Zvelebil

***What are the English Works based on Tamil religious works?***

Kamil Zvelebil (1927 – 2009), a distinguished Czech scholar in Indian literature and linguistics, in his book 'The Smile of Murugan' quotes about the tamil scriptures:
"Not only an amazing literary and musical achievement and the embodiment of the religious experience of the entire Tamil Nation, but also tremendous moving force in the lives of the people of Tamil Nadu."

**About classical tamil poetry:**


Fr. G.U.Pope

"Early Tamil poetry was rather unique by the virtue of its literary excellence; those 26,350 lines of poetry promote Tamil to the rank of one of the greatest classical languages of the world - though the world at large only just about begins to realise it"
Christian missionaries, intrigued by the rich literary heritage of the Tamils, began translating Saivaite religious texts into western languages and wrote monographs on it.
George Uglow Pope (1820-1908), who spent, many years teaching in S.India, and became a well-respected scholar of Tamil, translated the Tamil Classic THIRUVASAKAM and THIRUKKURAL into English, almost a century ago.

Glenn Yocum has published a study of Tiruvasakam. David Shulman had translated the devotional poems of Saint Suntharar, numbering about a thousand verses, recently.
HILKO Wirado Schomerus (1879-1975), wrote a monograph on the system of Saiva Sidhantha and translated Saivaite hymns and legends into German.
Following these pioneers a fair number of western scholars have focused their research on Saivaism. Some like Alain Danielou or Stella Kramrisch even took

imitation from Saivaite hymns. Among the noteworthy major recent scholarly publications on Saivaism by western in English are Doniger O' Flaherty and S.Kramrsch.




***Do Puranas & Epics contain historical veracity?***

Are they representations of the highest ideals for the conduct of humanity? Or
Are they mere epic poems such as those of Homer?

"Some historical truth is the nucleus of every purana. The object of purana is to teach mankind the sublime truth in various forms; and even if they do not contain any historical truth, they form a great authority for us in respect of the highest truth, which they inculcate.




"The sublimity of the law propounded by Ramayana or Mahabharat, does not depend upon the truth of any personality like Rama or Krishna, and one can even hold that such personage never lived, and at the same time take those writings as high authorities in respect of the grand ideas, which they place before mankind.

"Hindu philosophy does not depend upon any personality for its truth. Thus, Krishna did not teach anything new or original to the world, nor does Ramayana profess anything which is not contained in the Scriptures.



"It is to be noted that Christianity cannot stand without Christ, Mohammedanism without Mohammed, and Buddhism without Buddha, Jainism without Mahavira, Sikhism without Guru Nanak and so on. But Hinduism stands independent of any man and for the purpose of estimating the philosophical truth contained in any Purana, we need not consider the question whether the personage treated therein were really material men or were fictitious characters. The object of the puranas was the education of mankind."

**-Swami Vivekananda in 'The Hindu' 1897**

***How is God portrayed in Vedhas?***

Gods hymned in the Vedhas form a pantheon associated with natural and external forces -deities associated with Sun, Moon, Earth, Sky, Wind and Night. There are also gods and goddesses with specific cultural spheres like warfare, healing, and rituals.

***What is Brahman?***

In Hinduism, Brahman is "the unchanging reality amidst and beyond the world", which "cannot be exactly defined". It has been described in Sanskrit as Sat-cit-ānanda (being-consciousness-bliss) and as the highest reality.

***What is Atman?***

Atman is the true self within the individual person, the immortal, pure essence of each being. One of the most famous passages describing the relation of Brahman and Atman is conversation between Shvetaketu and his father in the Chandogya Upanishad (6.12 –13) :

***What is the relationship between Brahman and Atman?***

There are four great Vedic statements from the four Vedas explaining this, as experienced by the Vedic seers (Rishis) and subsequently explained by philosophers. The four great Vedic statements:

**1. TAT TVAM ASI (THAT THOU ART). From Samveda - Chandogyopanisad**
**2. AHAM BRAHMASMI (I AM BRAHMAN). From Yajurveda - The Brhadaranyakopanisad**
**3. AYAM ATMA BRAHMAN (THIS SELF IS BRAHMAN). From Atharva Veda - Mandukyopanisad**
**4. PRAGNANAM BRAHMAN (BRAHMAN IS CONSCIOUSNESS) From Rgveda-Aitareyopanisad**

The story of Svetaketu explains the above statements further.

## The Story of Svetaketu

When Svetaketu was twelve years old, he was sent to a teacher with whom he studied until he was twenty-four. After learning all the Vedas, he returned home full of pride in the belief that he was exceptionally well-educated, and very critical of others.

His father said to him, "Svetaketu, my child, you are so full of your learning. Have you asked for that knowledge by which we hear the unhearable, by which we perceive what cannot be perceived and know what cannot be known?"



**"What is that knowledge, sir?" asked Svetaketu.**



His father replied, "As by knowing one lump of clay all that is made of clay is known - so, my child, is that knowledge, knowing which we know all."
"But surely these venerable teachers of mine are ignorant of this knowledge; for if they possessed it, they would have imparted it to me. Will you, sir, therefore, give me that knowledge?"

"So be it," said the father... And he said, "Bring me a fruit of the nyagrodha (Indian Banyan) tree."



"Here it is, sir."
"Break it."
"It is broken, sir."
"What do you see there?"
"Some seeds, sir, exceedingly small."
"Break one of these."
"It is broken, sir."
"What do you see there?"
"Nothing at all."

The father said, "My son, that 'nothing' is the 'subtle essence' which you do not perceive there. In that very essence stands the being of the huge banyan tree.

Believe it, my son. Everything that exists has its self in that subtle essence. That infinite source of the whole universe, that is Truth. It is the Self, and you, Shvetaketu, are that."

"Pray, sir", said the son, "tell me more."

"Be it so, my child", the father replied; and he said, "Place this salt in water, and come to me tomorrow morning."
The son did as he was told.
Next morning the father said, "Bring me the salt you put in the water."
The son looked for it, but could not find it, for the salt, of course, had dissolved.
The father said, "Taste some of the water from the surface of the vessel. How is it?"
"Salty."



"Taste some from the middle. How is it?"
"Salty."
"Taste some from the bottom. How is it?"
"Salty."
The salt was not lost, for the salt existed forever.

Then the father said,
***"Here, likewise in this body of yours, my son, you do not perceive the Truth; but there, in fact, it is. In that, which is the subtle essence, all that exists has its self. That is the Truth, that is the Self, and thou, Svetaketu, art That."***

**- Edited by S Atputhananthan**

# விம்பிள்டன் ஸ்ரீகணபதி கோயில் கும்பாபிஷேகம்



# சிதம்பரம் கோயில்







லண்டனில் No1 நகை மாளிகை
Lakshmis Jewellers
எங்கள் மாதாந்திர
நகைச்சீட்டு
திட்டத்தில் சேர்ந்து
பயனடையுங்கள்
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை




இலண்டனில் Setline Data அச்சகத்தால் (தொலைபேசி:0207 232 0446) அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 14-04-2015 அன்று வெளியிடப்படுகிறது.